MUTUR JMI PVT LTD
SINCE 2016

# முத்திதழ்

MUTHTHITHAL
මුත්තිදල්

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு

சிற்றிதழ் : 10

டிசம். – மார்ச் 2023

ISSN 2806-5123





## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2023

## FILM FESTIVAL MEGA NIGHT

## புலமைப்பரிசில் , க.பொ.த உயர்தரப் பெறுபேறு

## நூல்வெளியீடு





Rs. 150/=

இரு மாத சிற்றிதழ்

மாதாந்த இதழ்
# முத்திதழ்
முத்துப்படைப்புகளின் தொகுப்பு
SCAN ME
Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk
## எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்
www.muththizhal.com | +94 740818782 | Mutur | Muththizhal






## Mutur Baby Care
*A Destination for Child Care*

- பேபி கூடை
- பேபி நப்கின்
- பேபி சட்டை
- தொப்பி சொக்ஸ்
- தொப்புள் கிளிப்
- பேபி கிறீம்
- பேபி குலோன்
- பேபி பவுடர்
- பேபி சோப்
- பவுடர் கேஸ்



**Main Street, Mutur - 01 / 0772258658 / 0757577521 / 0751766666**

## MUTUR JMI PVT LTD
TO CHANGE FUTURE

jmi MUTUR

# Offset Printing & Photocopy Services

MINIMUM QUANTITY 100


40% OFF

*Island Wide Delivery Available*

Past Papers | Teachers Guide | Notes | Project Research Papers | Assignment | Term Test Papers | Tution Class Tutes | Online Class Notes | Subject Books Pdf files and etc

FREE DELIVERY







### Offset Printing
- Four Color to One Color
- 70 - 250 GSM Papers
- A5, A4, A3, Offset Printing
- Photocopy & Duplo
- Typing & Layouts
- Cover Design
- Visiting Card

A4 - 5.50
A3 - 12.50

### Book Binding
- Perfect & Hard Binding
- Book Publication
- Glossy & Mett Lamination
- 60 - 80 Gsm Papers
- Megazine, Book, Project
- Instalment Payment Available

A4 - 5.40
A3 - 12.20
B5 - 10.00

### Color Printing
- Four Color (Inject & Laser)
- 70 - 250 GSM Board & Papers
- A5, A4, A3, B5, Color Printing
- Certificate & Photos
- Layouts & Designing
- Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc

A4 - 40.00
A3 - 100.00

Our Office
Bazar Mosque Road
Mutur - 04, Trincomalee

Mutur JMI
Contact Now
+94 77 1020030
+94 71 789 1887

More Information
www.mutur-jmi.com
muturjmi@gmail.com

# Appointment
pages reservation Application

MP NEWS

## பாஸ்போர்ட் ஒன்லைன் புக்கிங்







MP NEWS OFFICE
Main Street, Mutur
E-mail : mpnews.sl@gmail.com
Tell : 077 250 88 25
Tell : 075 222 10 27
Whatsapp : 076 153 12 13
Fax : 026 22 38 205

முத்திதழ்

நீ.. நான்.. நாம்...

# ஈராண்டு சிறப்பு மலர்

இதழ்–10, டிசம்பர் / மார்ச் 2023




Size - A4
Pages - 24
Location - Mutur
Category - Magazine
Layout By - Ihshan JMI
Adz Partner - OML Mutur

**Mutur JMI Publication**

Contact - 0262238038, 0771020030
Gmail - muturjmi@gmail.com
Social Media - Muththithal Mutur
Address - Bazar Mosque Road, Mutur

**பிரதம ஆசிரியர்**
JUNAID MOHAMED IHSHAN

**பணிப்பாளர் சபை**
Abdul Cader Mohamed Asmy
Ajees Mohamed Rajees
Niyas Aasha Falin
Buhary Razeen Riza

**ஆலோசனைக் குழு**
*M.S. Amanullah (Retd. Principal)*
*Dr. A. Sathees Kumar (MBBS)*
*Ashseikh N.M. Nisath (Naleemi)*
*P. Priyangkan (RJ - IBC Tamil)*
*Mrs. Susana Munas (Teacher)*
*Mr. W. Mohamed Asmy*

தேடல் எனும் அறிவின் வாயல் ஆய்வுக் கட்டுரை - B.R.Riza — 21

ரமழான் எனும் பாசறை - AWM. Basir — 03

Film Festival Maga Night 2023 — 10

மூதூர் வரலாறு ஜப்பானிய விமானம் விழுந்தமை - MSM. Bishri — 09

சேவை நலன் பாராட்டு ஓய்வுநிலை அதிபர்கள் — 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் — 24

பரீட்சை பெறுபேற்று பகுப்பாய்வு — 12, 13

மூதூரின் முக்கிய நிகழ்வுகள் - Mutur JMI — 05

இலக்கிய வெளியீடுகள் — 07, 08

**Rs : 150/=**

## ஆசிரியர் மடல்

ஜே.எம்.இஹ்ஷான்
பிரதம ஆசிரியர்

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்தீரணம் அற்ற பொருளாதார நிலை மற்றும் அரசியல் தளம்பல் என்பன பொதுமக்களின் இயல்பு வாழ்கையில் பெரிதும் தாக்கச்செலுத்தும் பிரதான காரணியாக தொழிற்படுகின்றது.

மூதூர் பிரதேசத்தை பொருத்தமட்டில் நாளாந்தம் உள்நாட்டைவிட்டு வெளியே றும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை சமகாலத்தில் சடுதியாக அதிகரித்துள் ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதற்கு பின்னணியில் தொழிலற்ற படை யினரின் எண்ணிக்கை அதிகரிப்பும், உள்ளூரில் சுயதொழில் ஒன்றை நிறுவு வதில் எதிர்நோக்கும் நடைமுறை ரீதியி லான சவால்களையும் அடையாளம் காட்டம் முடியும்.

எதிர்நோக்கி இருக்கும் பிரதேச சபைத் தேர்தலைத் தொடர்ந்து பல சமூக ஆளுமைகள் இம்முறை அரசியல் களத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள் ளமை வரவேற்ப்புக்குரிய விடயதானமாக அமைந்துள்ளது. இதேவேளை என்றும் இல்லாத அளவில் இம்முறை போட்டி யிடும் கட்சிகளின் எண்ணிக்கை அதிகரிப்பினால் பல எதிர்பார்க்காத முடிவு களை மூதூர் பிரதேசசபைத் தேர்தல் முடிவு அளிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இம்முறை புனித ரமழான் அமைதியான சூழலை நாடளாவிய ரீதியில் சந்தித் துள்ளது. இது ஒருபுறம் இருக்க பல வறுமை நிலை குடும்பங்களை உள் நாட்டின் பொருளாதார சூழல் உருவாக் கியுள்ளது. எனவே முடியுமான அளவிற்கு தானதர்மங்களையும், சகாத் களையும் கூட்டு ஈடுபாடோடு வழங்க தனவந்தர்கள் முன்வரவேண்டும்.

முத்திதழ் சஞ்சிகையின் இராண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு இதழாக இம்மாத இதழ் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை முதலாவது மருத்துவ நிருவாக சேவை அதிகாரி

## வைத்தியர் கபீர் முஹம்மது நிஹால்

வைத்திய சேவையில் கடந்த 23 ஆண்டுகள் மேலாக சேவையாற்றும் மருத்துவர் **கே.எம்.நிஹால்** அவர்கள் மருத்துவ நிருவாக சேவை தரத்திற்கு தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மூதூரின் முதல் மருத்துவ நிர்வாக சேவை வைத்தியராக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை அல்ஹிலால் மத்திய கல்லூரியிலும், உயர்தரத்தை கல்முனை ஷாஹிரா கல்லூரியிலும் கற்று 1995 ஆம் ஆண்டு கழனி பல்கலைக் கழகத்திற்கு மருத்துவ பீடத்திற்கு தேர்வாகினார்.

2000-2001 கண்டி பொது வைத்தியசாலையிலும் , 2002-2004 DMO ஆக ஒலுவில் மாவட்ட வைத்தியசாலையிலும், 2005-2009 ஒலுவில் மாவட்ட வைத்தியசாலையில் DMO ஆகவும் பணியாற்றினார். 2010- 2011 காலப்பகுதியில் SHO Gyn & Obs ஆக கொழும்பு தெற்கு பயிலுனர் வைத்தியசாலையில் கடமையாற்றினார். மேலும் 2012-2016 காலப்பகுதியில் ஓமான் நாட்டில் தீவிர சத்திர சிகிச்சை பிரிவில் ஆலோசகராக பணியாற்றினார். 2017-2019 ஆண்டுகளில் மூதூர் தள வைத்தியசாலையில் வைத்தியராகவும் பணியாற்றியுள்ளார். இதேவேளை 2020-2021 காலப்பகுதியில் வடகிழக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சின் கொவிட் தொற்று நோய் இணைப்பாளராகவும் கடமையாற்றினார். தற்போது கொழும்பு டீ சொய்ஸா மகளிர் மருத்துவமனையில் பிரதிப்பணிப்பாளராக பதவியேற்று தற்போது பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருது

*2023* ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் மாவட்ட ரீதியில் சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான தெரிவு இடம்பெற்றது.

மூதூர் பிரதேச செயலக பிரிவிலிருந்து மூதூர் கட்டை பறிச்சான் தெற்கு அரபா நகரைச் சேர்ந்த **அபூபக்கர் நஜிகா (கற்றாலை எண்ணை உற்பத்தி)** மற்றும் தோப்பூர் ஜின்னா நகரைச் சேர்ந்த **அசின் ரிசானா உம்மா (மிக்சர் உற்பத்தி)** ஆகியோர் சிறந்த தொழில் முனைவோர்களாக தெரிவு செய்யப்பட்டனர் இதற்கான கௌரவிப்பும் சான்றிதழ்களும் ***3023/3/23*** கௌரவ கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களினால் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது

இவர்களது முயற்சிக்கு பலம் சேர்க்கும் வகையில் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய பிரதேச செயலாளர் ஜனாப் எம்.பி.எம் முபாரக் அவர்களும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எஸ்.பானு, மகளிர் அபிவிருத்தி உதவியாளர் பஹி சியாமா ஆகியோரை மூதூர் சார்பாக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



# ரமழான் எனும் பாசறை



அஷ்ஷெய்க் **AWM. Basir (M.A)**
விரிவுரையாளர்
உயர்கல்விக்கான பாதிஹ் நிறுவனம்,
திஹாரிய

அருள் பொருந்திய ரமழான் எம்மை வந்தடைந்துள்ளது. 11 மாதங்கள் சாதாரண வாழ்க்கையை அனுபவித்தவர்களுக்கு ஒரு மாத கால கடுமையான பயிற்சிநெறியை சுமந்து கொண்டு அது வந்துள்ளது. இந்தப்பயிற்சி நெறியை சரியாக முடிப்பவர்களால்தான் அடுத்த 11 மாதங்களையும் சரியாக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ரமழான் ஒரு மாதகால பயிற்சிப் பாசறை. இந்தப் பாசறையில் முழு மாதத்தையும் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காகத்தான் நோன்பை முஸ்லிம்கள் மீது அல்லாஹ் கடமையாக்கினான்.

'விசுவாசிகளே! உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. நீங்கள் இறை பிரக்ஞை பெறவேண்டும் என்பதற்காக' *ஸூரா அல்-பகறா: 183.*

இந்த ரமழானை சரியாக பயன்படுத்துபவர்களுக்கே இறைபிரக்ஞையுள்ளவனாக மாற முடியும். அந்த வகையில் இந்த ரமழானில் எப்படியான பாடங்களையும் பயிற்சிகளையும் பெறலாம் என்பதற்கான சில வழிகாட்டல்களை இங்கு தருகிறோம்.

**1 – அல்-குர்ஆனை ஓதுவதுடன், அதன் கருத்துக்களை விளங்குதல்:**

ரமழான் அல்-குர்ஆன் இறக்கப்பட்ட மாதம். மக்களுக்கு நேர்வழியாக அது இறக்கப்பட்டது. எனவே அதிலிருந்து நேர்வழியை பருகுவதற்கு இம்மாதத்தை மிகவும் பயன்படுத்த வேண்டும். நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் நமது முன்னோர்களும் இம்மாதத்தில் அதிகமாக அல்-குர்ஆனை ஓதியுள்ளனர். பலமுறை அதனை நிறைவுசெய்துள்ளனர். தமக்கிடையே பரஸ்பரம் அதனைப் படித்துள்ளனர். தொழுகைகளில் அவற்றை ஓதியுள்ளனர். இமாம் மாலிக் (றஹ்) ரமழான் வந்துவிட்டால் பேசுவதை நிறுத்தி விட்டு, குர்ஆனின் பக்கம் சென்றுவிடுவார்கள்.

**2 – உளத்தூய்மையை ஏற்படுத்தல்:**

இரகசியத்திலும் பரகசியத்திலும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வை ஒவ்வொருவரும் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பஜ்ர் உதயமா-வதிலிருந்து சூரியன் மறையும் வரை மனோயிச்சைகளிலிருந்து தவிர்ந்து வாழ வேண்டும். யாரும் பார்க்காமல் இரகசியமாக பாவங்கள் செய்ய ஒருவர் துனியலாம். இரகசியமாக சாப்பிட்டுக் கொண்டு நோன்பிருப்பதாக மக்களுக்கு முன் காட்டலாம். ஆனால் அல்லாஹ் ஒருவன் அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வை ஒருபோதும் மறக்கக்கூடாது. நோன்புக்கு அல்லாஹ் கூலி தருவதாக வாக்குறுதி அளித்துள்ளான். எனவே யாராவது அவனை ஏமாற்ற நினைப்பது தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதாகும். ஹதீஸில் குத்ஸியில் அல்லாஹ் சொன்னதாக நபியவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: நோன்பு எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுக்கிறேன். அதில் ஒரு நன்மைக்கு பத்து மடங்கு நன்மையை வழங்குகிறேன்.' *(முத்தபகுன் அலைஹி)*

**3 – பொறுமையைக் கற்றல்:**

பொறுமை, பசித்திருத்தல், தாகித்திருத்தல், பழக்கவழக்கங்களை விட்டுவிடுதல், விழித்திருந்து வணங்குதல், குர்ஆன் ஓதுதல், மக்களின் துன்பங்களை சகித்துக் கொள்ளல், அதற்கு பதிலாக அவர்களுக்கு நன்மை செய்தல் என்பற்றின் மூலம் ரமழானில் எமது நாட்டசக்தியையும் மனோபலத்தையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். இவற்றுக்கு மிகுந்த பொறுமை உணர்வு அவசியமாகும். நபி (ஸல்) கூறினார்கள்: 'உங்கள் ஒருவர் நோன்பு நோற்றால் உடலுறவு கொள்ள வேண்டாம். உரத்து சத்தமிட வேண்டாம். யாராவது ஏசினால் அல்லது சண்டைக்கு வந்தால் நான் நோன்பாளி எனக் கூறிவிடவும் *(முத்தபகுன் அலைஹி)*

**4 – கொடுக்கவும் செலவுசெய்யவும் வாரிவழங்கவும் பழகுதல்:**

கொடை கொடுப்பது அல்லாஹ் விரும்புகின்ற சிறந்த பண்பாகும். அதனைச் செய்யுமாறு தூண்டுவதும் ஒரு வணக்கமாகும். அது ஒரு அடியானை அலங்கரிப்பதுடன், படைப்பாளனதும் படைப்புக்களினதும் அன்பையும் பெற்றுக் கொடுக்கிறது. இப்பண்பினால் ஷைத்தான் கோப-மடைகிறான். இதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

'ஷைத்தான் உங்களுக்கு வறுமையை வாக்குறுதியளிக்கிறான். மானக்கேடானவைகளை செய்யும் படி உங்களை ஏறுவுகிறான். அல்லாஹ் அவனது பாவமன்னிப்பையும் அருளையும் வாக்குறுதியளிக்கிறான். அல்லாஹ் விசாலமானவனும் மிகவும் அறிந்தவனாகவுமிருக்கிறான். *(அல்-பகறா: 268)*. இவ்வசனத்தில் மானக்கேடான அம்சம் என்பதற்கு அறிஞர்கள் கஞ்சத்தனம் என விளக்கம் சொல்லியுள்ளனர்.

ஆகவே ரமழானில் கஞ்சத்தனம், உலோபித்தனம் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கு கடுமையான பயிற்சிகளை எடுக்க வேண்டும். இறைபாதையில் செலவுசெய்தல், உணவளித்தல், நோன்பாளிகளுக்கு இப்தார் ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், ஏழைகளுக்கு நல்லுபகாரம் புரிதல், கடமையான ஸகாத்தை வழங்குதல், தர்மம் செய்தல் என அப்பயிற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். இவ்விடயங்களில் இறைதூதர் (ஸல்) அவர்களிடத்தில் எமக்கு ஏராளமான முன்மாதிரிகள் காணப்படுகின்றன.

இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கின்றார்கள். 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) வீசும் காற்றைவிட வேகமாக வாரிவழங்குபவராக காணப்பட்டார்கள். *(ஆதாரம்: முஸ்லிம்)*

**5 – முயற்சி மற்றும் கடின உழைப்புக்கு பழக்கிக் கொள்ளுதல்:**

உளப்போராட்டம், மனோயிச்சைக்கு எதிரான கடுமையான முயற்சி, ஷைத்தானுக்கு எதிரான போர், சில்லறை விடயங்களை தவிர்ந்து கொள்ளுதல், உயர்ந்த விடயங்களை நோக்கிச் செல்லல் முதலியவற்றை இந்த ரமழானில் எமது பழக்கத்திற்கு கொண்டு வருதல் வேண்டும். இவற்றை ஏற்படுத்தவே நோன்பு நோற்க வேண்டும், நின்று வணங்க வேண்டும். திக்ர்கள் புரிய வேண்டும். குர்ஆன் ஓத வேண்டும். வீணான பேச்சுக்களும் விரசமான உரையாடல்களும் கேளிக்கைகளும் கொண்ட சபைகளை, கூட்டங்களை வெறுத்தொதுக்க வேண்டும். பாவமன்னிப்பிலும் இஸ்திஃபாரிலும் அதிகம் ஈடுபட வெண்டும். அல்லாஹ்வுடனான உடன்படிக்கையை புதிப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

**6 – உடல் ஆரோக்கியத்திற்கான பயிற்சி பெறுதல்:**

ரமழானில் அறிவு ரீதியான, ஆன்மீக ரீதியான பயிற்சிகளைப் பெறுவது போலவே, உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான பயிற்சியையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். வியாதி, பிணி, நோய்களிலிருந்து உடம்பைப் பாதுகாப்பதற்கான பயிற்சியை எடுப்பதுடன், உடலை மிகுந்த ஆரோக்கியத்துடன் வைத்திருப்பதற்கான முயற்சிகளையும் நாம் செய்திட வேண்டும். நோன்பு உடம்பின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வல்லமையை கொண்டிருப்பதாக மருத்துவ துறை சார் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உமர் (றழி) அவர்கள் சொன்னார்கள்:'நோன்பு பிடியுங்கள். ஆரோக்கியம் பெறுங்கள்'. இதன் கருத்து மிகவும் சரியானதாகும்.

மேற்சொன்ன விடயங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதினூடாக இந்த ரமழானை ஒரு பாசறையாக மாற்ற முடியும். இந்தப்பாசறையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு மகத்தான பாக்கியங்கள் கிடைக்கவிருக்கின்றன.

நபி (ஸல்) குறிப்பிட்டார்கள்: 'யார் ரமழான் மாதத்தில் ஈமானோடும், கூலியை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன.' *(முத்தபகுன் அலைஹி)*

மேலும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்: ஒரு நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உண்டு. ஒன்று நோன்பு திறக்கும் போது அதனால் அவன் மகிழ்ச்சியடைகிறான். அடுத்தது அவன் அல்லாஹ்வை சந்திக்கும் போது இந்த நோன்பைக் கொண்டு சந்தோசப்படுகிறான். *(முத்தபகுன் அலைஹி).*

ஆகவே மேற்சொன்ன விடயங்களை இம்முறை சிறப்பாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினால் நிச்சயமாக இந்த ரமழான் எமக்கான மாற்றத்தின் மாதமாக மாறிவிடும்.

நேர்கண்டவர் : இஹ்ஸான் ஜே.எம்.ஐ

# நேர்காணல்



சுஹைதா மஷ்ஹூர்

### உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்தை தாருங்கள்

இயற்கை வளம் சொழிக்கும் இலங்கைத் திரு நாட்டின் கிழக்கிலங்கையின் திருகோண மலை மாவட்டத்தின் முத்தூர் என முன்னோர் களால் வர்ணிக்கப்பட்ட இயற்கை வழங்களால் மெருகூட்ட மஹாவலியால் கங்கை சங்கமிக் கும் அழகிய கிராமம் எனதூர் மூதூர்.

1960ல் எம்.ஐ.எம்.மஷ்ஹூர் ஆலிம் அவர்களுக்கும் ஸம்சுன் நஹார் என்பவருக்கும் இரண்டாவது மகளாகப் பிறந்தவள்.

ஆரம்ப கல்வியை தி/மூதூர் புனித அந்தோணியார் பாடசாலையில் கல்வி பயின்றேன். தரம் பத்து வரை படித்தேன். எனது தந்தையும் அப்பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றினார். எனது பன்னிரெண்டாவது வயதில் தந்தை காலமானார். 1980 திருகோண மலையில்உள்ள ஏ.எஸ்.ஏ.கரீம் என்பவரைத் திருமணம் செய்து அங்கிருந்து பின் தற்போது கொழும்பில் வசித்துக் கொண்டிருக்கிறேன்.

### எழுத்துத் துறையில் பயணிக்க எப்படி ஆர்வம் வந்தது?

வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கும் என்பார்கள். எங்கள் வீட்டிலும் சிறியதொரு நூலகம் இருந்தது.

நான் சிறுவயதில் இருந்து வானொலி கேட்பது பத்திரிகைகள் சிறுவர் கதைகள் படிப்பதில் ஆர்வம் இருந்தது. அத்துடன் எனது தந்தையும் ஒரு இலக்கிய வாதி என்பதால் அதன் தாக்கமும் இருந்திருக்கலாம். சிறு வயதில் சின்னச் சின்ன வரிகள் எழுதி தந்தையிடம் பாராட்டு வாங்கியதில் ஆரம்பமானது. பாடசாலை நிகழ்வுகளில் பல தமிழ்த்திறன் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்கள் பல பெற்றிருக் கின்றேன். தந்தை இருக்கும் போதே எழுத்துத் துறையில் கொஞ்சம் ஊக்கப்படுத்தி இருந்ததால் பின்னாளில் எழுத்தாற்றலை வளர்த்துக் கொண்டேன். 1978ல் எனது கலைப்பயணம் ஆரம்பமானது.

### உங்கள் ஆக்கங்கள் எப்படியானது? எந்த ஊடகங்களில் பிரசுரமாகி இருக்கின்றன?

அனேகமாக எனது ஆக்கங்கள். சிறுகதை, கவிதை, கட்டுரை கள், விமர்சனம், இவைகளில் விழிப்புணர்வு ஊட்டக் கூடியதாகவும் சமூக அவலங்களை வெளிக்காட்டக் கூடியதாகவும் பெண்களின் அவல நிலையை தன்னம்பிக்கை வளர்க்கக் கூடியதாகவும் அமைந்திருக்கும். பத்திரிகையை எடுத்துக் கொண்டால் தினபதி, தினகரன், வீரகேசரி, நவமணி, மித்திரன், வடிவெள்ளி, பல சஞ்சிகைகள், வானொலி தொலைக்காட்சி நிகழ்வுகளில் கலந்து கொள்வது ஆக்கங்கள் எழுதுவது இப்போது முகநூல் வாயிலாக பல போட்டிகளில் பங்கு கொள்கிறேன்.

நோன்பு ஹஜ் போன்ற காலங்களில் நேரடி தொலைக் காட்சி வானொலி நிகழ் வில் “இஸ்லாமிய கவியரங்கு” எனும் பகுதி யினூடாக கலந்து சிறப்பித்துள்ளேன்.

அத்துடன் வெளிநாட்டு வானொலி நிகழ்ச்சிகளான லன்டன் தமிழ் வானொலி கவிதை நிகழ்விலும் அவுஸ்ரேலிய இன்பத் தமிழ் வானொலி நிகழ்ச்சியான "வளர் பிறை" என்ற பகுதிகளினூடாக குரல் கொடுத்தும் எனது இலக்கிய பயணம் தொடர்கிறது.

தற்போது முகப்புத்தக(Facebook) வாயிலாக **சுஹைதா மஷ்ஹூர்** எனும் பெயரில் பயணிக்கிறேன். முகநூல் பக்கம் இயங்கிவரும் இதயத்தளம். குழுமத்தில் சமீப காலமாக நிருவாகியாகப் பயணித்து வருகிறேன்.

### நீங்கள் ஏதாவது நூல் வெளியீடு செய்துள்ளீர்களா?

இல்லை.

எனது ஆக்கங்கள் நூலுருவாக்கப் படவில்லை. எனது தந்தை ஒரு இலக்கியவாதி அவர் எழுதிய பல குட்டிக்கதைகள் சிறுகதைகள் பத்திரிகையில் வெளியாகி ருந்தன. அவருடைய காலத்தில் அதை நூலுரு வாக்க முடியவில்லை. அவற்றை நூ லுருவாக்கி 2013ல் மூதூரில் வெளியீடு செய்தேன்.

### எழுத்துத் துறயைில் நீங்கள் எதிர் கொண்ட சவால் பற்றிக் கூற முடியுமா?

ஆம் நிச்சயமாக....

அன்றைய காலகட்டத்தில் எழுத்துத் துறையில் மட்டுமல்ல பெண்கள் எதை சாதிப்பது என்றாலும் பல தடைகளைத் தாண்டி தான் அவர்களின் பயணம் தொடர்ந் தது. பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு கட்டுப்பாடு.

நான் எழுதும் காலத்தில் என் வீட்டில் கூட தடையாகத்தான் இருந்தது.

சிறிது காலம் புனைப்பெயரில் எழுதி னேன். கலை நிலா, கலமைதி, மூதூர் FM நிலா இப்படி. காரணம் என்னவென்றால் அடிக்கடி வரும் கடிதங்கள் தொலைபேசி இல்லை அத்துடன் ஆண்கள் கூட பெண்கள் பெயரில் கடிதம் எழுதத் தொடங்கினார்கள்.

இதனால் நான் எழுதுவதே சிறிது காலம் தவித்திருந்தேன். திருமணத்தின் பின் அதிகம் எழுத தொடங்கினேன். அதிலும் எனது சிறு கதைகள் கவிதைகள் வானொலி மூலமாக

கேட்பவர்களும் சரி பத்திரிகைகளில் படிப்பவர்களும் சரி விமர்சிக்கத் தொடங்கி னார்கள். ஏன் தேவயைற்ற வேலை, கவிதை சோறு போடுமா?

அப்போதும் ஏன் எதற்கு இப்படி என்று பல கேள்விகள். சிலர் என்னுடைய கதையை தான் எழுதுகிறேன் என்றாகிவிட்டது.

இருந்தும் என் கணவர் அல்ஹாஜ் ஏ.எஸ்.ஏ.கரீம் அவர்கள் இதற்கு தடை விதிக்கவில்லை அவ்வப்போது பல நல்ல நூல்களை எனக்கு வாங்கி தருவார். அதனால் தொடர்ந்து எழுதத் தொடங்கினேன். விமர்சனங்கள் விலாசமில்லாமல் வந்தாலும், தொடர்ந்து எழுதினேன். தற்போது சற்று வேலைப்பழு அதனால் அத்தி பூத்தாற்போல் எழுதுகிறேன்.

பெண்களால் தொடர்ந்து எழுத்துத் துறையில் பயணிக்க முடிவதில்லை. ஆரம்பத்தில் ஆவலாக தொடர்ந்து பயணித்து வரும் பெண்கள் திருமணத்தின் பின் அவர்களால் தொடர்ந்தும் பயணிக்க முடிவதில்லை காரணம் அவர்களின் பொறுப்புகளும்

வேலைப்பழு. அத்துடன் கணவர் அத்துறையில் சார்ந்தவராக இருந் தால் ஓரளவு அனுமதி கிடைக்கிறது. அடுத்து சமூகத்தின் பார்வை கூட அவர்களின் எழுத்திற்கு தடையாக இருக்கிறது.

எத்தனையோ பெண் எழுத்தாளர்கள் இலைமறை காயாக இன்னும் இருக்கின் றனர். இவ்வாறானவர் வெளிவர வேண்டும் என்பது எனது நீண்டகால அவா...

# மூதூரின் முக்கிய நிகழ்வுகள்

## மீன்பிடி எல்லையை குத்தகைக்கு வளங்கிமை தொடர்பில் அமைதிப் பேரணியுடன் மகஜர் கையளிப்பு

மூதூர் கடல் எல்லைப்பரப்பில் 375 ஏக்கர் பகுதியினை தனியார் நிறுவன மொன்றுக்கு குத்தகைக்கு வழங்கிய மைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் அமைதிப் பேரணி தக்வா நகர் பள்ளிவாயல் இல் இருந்து ஆரம்பிக் கப்பட்டு தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளருக்கு கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி காலை 9.00 மணி அளவில் மீனவர் சங்கத்தின் சார்பில் மகஜர் கையளிப்பு செய்யப்பட்டது.




















## பசுமைப்புரட்சி விழிப்புணர்வு துவிச்சக்கரவண்டியோட்டம்

துவிச்சக்கரவண்டி ஓட்டமூடாக மீள் காடாக்கம் என்ற பாரியதொரு சூழலியல்சார் எண்ணக் கருவை மக்கள் மையப்படுத்தி விழிப்புணர்வூட்டும் CYCLING_GREEN குழுமம் துவச்சகரவண்டி ஓட்டம் இன்று திருகோண மலையில் இருந்து கல்முனை வரை ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்போது மூதூரில் இயங்கும் MUTUR RIDERS HUB, ELITE ACADEMY, Lions Club of Muthur United என்பன ஒன்றிணைந்து குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பங்கேற்பு செய்தனர். அத்துடன் 2000 மேற்பட்ட விதைப்பந்துகள் அன்பளிப்பு செய்யப்ப தோடு அவற்றை எவ்வாறு தயாரிப்பது தொடர்பான வழிகாட்டலும் தெ.கி.ப.கழக விருவிரையாளர் **Mohamed Riyas** அவர்களினால் அளிக்கப்பட்டது.



பிரதேச சபை எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடளாவிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் எல்லை நிர்ணய முன்மொழிவுத் தொடர்பிலான சமூக மட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல் கடந்த நவம்பர் மாதம் 27 மூதூர் பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் எம்.சீ.எம். ஷெரீப் அவர்களின் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர், மூதூர் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள், புத்தி ஜீவிகள், வழக்கறிஞர்கள், அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள் மற்றும் பொதுமக்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்ததோடு ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

- எல்லை நிர்ணய அடிப்படையிலான பிரதிநிதிகள் தேர்வு செய்யப்படுத்தல்
- மேலதிக பிரதிநிதிகள் நீக்கப்படும்
- பழைய முறைப்படியான பிரதிநிதித்துவம் வழங்குதல்
- பிரதேச சபையை நகர சபையாக உயர்த்தி இரண்டு பிரதேச சபைகளை சம்பூர், தோப்பூர் பிரதேச சபைகளாக முன்மொழிவு செய்தல்
- மூதூர் பிரதேச எல்லையில் தமிழ் முஸ்லிம் மக்கள் பிரதேச ரீதியாக பிரிந்து உள்ள நிலையில் இரண்டு முன்மொழிவுக்களை தமிழ் முஸ்லிம்கள் சார்ந்து முன்வைத்தல்.



# நூல் வெளியீடு
















மூதூர் சா.நா என்ற புனைப்பெயருடன் நகைச்சுவை படைப்பாளி சாகிர் அப்துல் ஜபார் அவர்கள் முகநூல் பக்கத்தில் எழுதிய மூதூர் நகைச்சுவை ஆக்கங்களை கொண்டு நூலுருவாக்கம் செய்யப்பட்டு "மூதூர் முசுப்பாத்திகள்" நகைச்சுவை தொகுப்பு நூல் இன்று ஞாயிற்றுக் கிழமை 26.02.2023 காலை 9.30 மணி அளவில் மூதூர் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலாபூஷணம் கே.எம்.இக்பால் மற்றும் அதிதிகளாக கௌரவ தவிசாளர் எம்.எம்.அரூஸ், ஓய்வுநிலை அதிபர் வி.எம்.நஹீப், கலாபூஷணம் பாய்வா அவர்களும் கலந்து கொண்டனர்.

நூல் வெளியீட்டின் தலைமையை ஏ.எஸ்.அப்துல்லா ஆசிரியர் அவர்களும், வரவேற்புரையை ஜே.எம்.இஹ்ஷான், நூல் அறிமுகத்தை ஹப்லுல்லாஹ் புஹாரி, நூலாசிரியர் அறிமுகத்தை ஷாய் பாவா மற்றும் நயவுரையை மூதூர் முகமட் ராபி அவர்களும் ஏற்புரையை நூலின் ஆசிரியர் சாகிர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் வாசகர்கள், நூலாசிரியர் நண்பர்கள் மற்றும் முகநூல் சொந்தங்கள் கலந்து சிறப்பித்ததோடு நூல்வெளியீட்டை Mutur JMI நிறுவனமும் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.


























# நூல் வெளியீடு




## பிரதேச சாகித்திய
## விழாவும் கலைஞர் கௌரவிப்பும்

மூதூர் பிரதேச செயலகத்தில் ஏற்பாட்டில் இன்று இவ்வாண்டுக்கான பிரதேச சாகித்திய விழாவும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.பி.முபாரக் அவர்களின் தலைமையில் இன்று சம்பூர் கலாசார மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம்.ஜயவிக்ரம, அவர்கள் பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதிகளாக பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அருஸ், போதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபலரத்தினம், வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் என்பவர்களோடு MOH, ZDE, IOC, சம்பூர் MO போன்றோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த நிகழ்வில் பிரதேச செயலக கலை இலக்கிய மலர் "முத்து - மலர்" வெளியீடு செய்யப்பட்டதோடு மூதூர் பிரதேசத்தை சார்ந்த 41 கலைஞர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டதோடு கலை கலாசார நிகழ்வுகளும் சிறப்புற இடம்பெற்றன.














## கடலோரப் பாதை சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகம்

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்களின் அனுசரணையில் கவிஞர் **மூதூர் முகைதீன்** அவர்களின் சிறுகதைத் தொகுப்பு நூல் "கடலோரப் பாதை" நூலின் அறிமுகவிழா இன்று பிரதேசசபை கேட்போர் கூடத்தில் நூலாசிரியர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ தவிசாளர் எம்.ஏ.அருஸ் அவர்களும், நூல் அறிமுகத்தை எழுத்தாளர் எம்.சி.எம்.ஷெரிப் அவர்களும், நூலின் நயவுரையை எழுத்தாளர் ஏ.எஸ்.அப்துல்லா அவர்களும் ஏற்புரையை நூலின் ஆசிரியரும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.







## உயிரோடு நானாக புதின நூல் வெளியீடு - நாவல்

**கதிர் திருச்செல்வம்** அவர்களின் மூன்றாவது மாபெரும் வெளியீடாக வெளிவந்துள்ள **"உயிரோடு_நானாக"** நூல் அறிமுகம் இன்று சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை திரு இரா.இரட்ணசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), நூல் அறிமுக உரையை திரு வி.நவரத்தினராஜா (ஓய்வுநிலை அதிபர்) அவர்களோடு, பொத்தகத்தின் மதிப்பீட்டு உரையை திரு.க.கனகசிங்கம் (ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களும் ஆற்றினார். சிறப்புரையை அனாமிகா நிலையத்தின் நிறுவனர் பேராசிரியர் பால.சுகுமார் ஆற்றியதோடு இறுதியாக ஏற்புரையை நூலாசிரியர் மேற்கொண்டார்.

**நூலாசிரியர்_பற்றி...** - *கதிர் திருச்செல்வம் அவர்கள் பன்முக ஆளுமையுள்ள சமூகப்பிராணி. எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், வாசகர், அரசியல் போராட்டத்தாரி, சமூக சேவையாளர் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர் என்று பல்துறையில் தனது பயணத்தை தொடர்ந்து வருகின்றார். நூலாசிரியர் இதற்கு முன்னர் உயரப்பார் (குறுங்கதை - 2019) உனக்குள் நீ (சிறுகதை - 2021) என்ற இரண்டு நூல்களை பிரசுரம் செய்துள்ளார்.*










# நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்






ஒன்லைன் மூதூர் வாசிகசாலையின் நான்கு ஆண்டுகளை முன்னிட்டான தேசிய வாசிப்பு மாதத்தை சிறப்பிக்கும் வகையில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகளைக் கொண்டு தொகுக்கப்பட்ட "தேடலால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற நூல் இன்று காலை 9.30 மணி அளவில் யுஏஸ் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய வாசிப்பு மாத கட்டுரைப் போட்டிகளுக்கான அனுசரணையாளர்கள் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். மேலும் சமூக சேவையாளர் மௌசூன் ஹாஜியார், எழுத்தாளர் எம்.எஸ்.அமானுல்லா மற்றும் போட்டி நடுவர் கதிர் திருச்செல்வம் அவர்களும் விசேட அதிதிகளாக கலந்துகொண்டதோடு போட்டியின் வெற்றியாளர்களும் பங்குபற்றி நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

அவ்வகையில் இந்நூலை வெளியீடு செய்ய உதவிய அனைவருக்கும், போட்டியின் பரிசில்களை அன்பளிப்பு செய்த அனுசரணையாளர்களுக்கும், நிகழ்வை நடாத்த இட வசதிகள் அளித்த ஏ.பி.எஸ் கல்லூரி நிறுவனர் ஐ.எம்.ஸீம்ரி அவர்களுக்கும் நிகழ்ச்சியை தலைமை தாங்கிய புஹாரி ரீஷா மற்றும் அஸ்மி ஏ.சி.எம். அவர்களுக்கும் ஒன்லைன் மூதூர் வாசிகசாலை சார்பிலான நன்றிகள்.


















## வேராகிப்போன மனிதர்கள்

### ஏ.எஸ் உபைதுல்லா அவர்களின் நாவல் நூல் வெளியீடு












மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மூத்த எழுத்தாளரும் ஓய்வு நிலை அதிபருமான ஏ.எஸ் உபைதுல்லா அவர்களின் "வேராகிப்போன மனிதர்கள்" என்ற நாவல் நூல் வெளியீடு நேற்று (08-01-2023) காலை 9 மணிக்கு ஆரம்பமானது. இந் நாவல் வெளியிட்டு வைபவத்துக்கு மூத்த கவிஞர் மூதூர் முகைதீன் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நூலை மக்கள் அபிவிருத்தி ஒன்றியம் வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.


வரவேற்புரையினை மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் ரஹ்மத்துல்லாஹ் றிபான் அவர்கள் நிகழ்த்தியிருந்தார். பிரதம அதிதியாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் அப்துல் அஸூஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். அதே போல விசேட அதிதியாக அனாமிகா பண்பாட்டு மையத்தின் நிறுவனர் பேராசிரியர் பாலசுகுமார் அவர்கள் பங்குபற்றியிருந்தார்.

நூல் அறிமுகத்தை ஓய்வு நிலை நிர்வாக சேவை அதிகாரி எம். சி. எம் சரீப் அவர்கள் நிகழ்த்தினார். இந்நூலிற்கான நயவுரையை ஆசிரியர் மன்சூர் அவர்கள் வழங்கினார். மேலும் நாவலாசிரியர் ஏ.எஸ்.உபைதுல்லா அவர்களின் இலக்கியப் பணிக்காக மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் ஜே.எம்.மாஹிர் அவர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். மேலும் சுமார் 36 ஆண்டுகளின் பிற்பாடு மூதூர் மண்ணிலிருந்து வெளிவரும் நாவல் என்பதும் குறிப்பிடித்தக்கது.

**இளம் படைப்பாளியான கங்குவேலியை சேர்ந்த "அஸ்வினி வையந்தி" யின் கவிதை நூல் வெளியீடு 2023.02.12 மு.ப.10.15 மணியளவில் என்னம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் தீபகாந்தன் தலைமையில் மௌன இறைவணக்கம் மற்றும் மங்கல ஒளியேற்றல் நிகழ்வுகளுடன் ஆரம்பமாகியது.**

**கிழக்கு பல்கலைகழக முன்னாள் மொழித்துறை தலைவரான பேராசிரியர் திரு."செ.யோகராசா" முதன்மை விருந்தினராகவும், திருகோணமலை முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு ஓ.குலேந்திரன் மற்றும் கவிஞர் திரு "யோகானந்தம்" ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வருகை தந்திருந்தனர். தலைமை உரையையும் வரவேற்புரையையும் என்னம்போல் வாழ்க்கை கனக தீபகாந்தன் நிகழ்த்தினார்.**

**கவிதாயினி பாலையூற்று அஷ்ரபா நூர்தீன் நூல் அறிமுக உரையினையும், நயவுரையினை கவிஞர் சம்பூர் வதனரூபனும் வழங்கினர். பேராசிரியர் திரு.செ.யோகராசா மற்றும் கவிஞர் திரு யோகானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நூலின் முதற் பிரதியை திருகோணமலை கட்டிட தொழில்துறை தொழில்நுட்ப கல்லூரியின் போதனாசிரியரான திரு.பொ.ருசேந்திரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.**










# மூதூர் ஷாபிநகரில் ஜப்பானிய விமானம் விழ்ந்த சரித்திரம்



இரண்டாம் உலக போர் 01.09. 1939 இல் ஆரம்பமாகி 02.09.1945 ஆம் ஆண்டு வரை சுமார் 6 ஆண்டுகள் நடைபெற்றன. பெரும்பாலான நாடுகளில் கோடிக்கணக்கான சொத்துக்களும், புராதன சின்னங்களும், விலைமதிக்க முடியாத பல இலட்சம் மனிதப் பேரழிவுகளை ஏற்படுத்தியமை எமக்கு சான்று பகர்கின்றன.

இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் இந்து சமுத்திரத்தின் முக்கிய கேந்திர நிலையமாக இருந்த நாடு இலங்கை ஆகும். உலகில் இரண்டாவது இயற்கை துறைமுகமான திருகோணமலைத் துறைமுகமும், அதன் பாதுகாப்பான புவியியல் சூழல் கொண்ட அமைந்த கொட்டியாரக்குடாவும் இலங்கையில் அமைந்திருந்தமையே காரணமாகும்.

திருகோணமலை துறைமுகத்தைக் கைப்பற்றி தன் வசப்படுத்துவதற்கு பல வல்லரசு நாடுகள் போட்டி போடுகின்ற நிலையில் சூரியன் அஸ்தமிக்காத நாடு என போற்றப்படும் பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழ் திருகோணமலை துறைமுகம் இருந்து வந்தது.

திருகோணமலைத் துறைமுகமானது இயற்கையாகவே மூன்று பக்கங்களும் மலைகளால் சூழப்பட்டிருந்தமை, யுத்த கப்பல்கள் நங்கூரமிடப்பட்டு பாதுகாப்பாக நிறுத்தி வைக்கும் இடம்,கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு ஏற்றவாறு 100 எண்ணெத் தாங்கிகள் காணப்பட்டமை, பாதுகாப்பான சுரங்கங்கள் அமைந்திருந்தமையும் இத்துறைமுகம் உலகில் பிரபல்யமாவதற்கு காரணமாகும்.

100 எண்ணெ தாங்கிகள் காணப்பட்ட நிலையில் இரண்டாம் உலகப் போரின் போது விமானம் ஒன்று மோதுண்டு ஒரு எண்ணெய்த் தாங்கி சேதமாகியதால் தற்போது 99 எண்ணெய் தாங்கிகளே காணப்படுகின்றன.

இரண்டாம் உலக யுத்தம் நடைபெற்ற காலங்களில் பிரித்தானியாவின் யுத்தக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்தன. கொட்டியாரக்குடா வழியாகவே கப்பல்கள் போக்குவரத்தை மேற்கொண்டன.

திருகோணமலைத் துறைமுகத்தில் ஜப்பானியரின் குண்டு வீச்சு:(09.04.1942) காலை : 07.20 மணி

திருகோணமலைத் துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரித்தானிய யுத்த கப்பல்களுக்கு ஜப்பானிய போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்தன. இதில் பிரித்தானிய கப்பல் மீது 09.04.1942 ஆம் ஆண்டு காலை 7 மணி 20 நிமிடம் அளவில் ஜப்பானிய விமானம் தாக்குதல் நடத்தியது. இதில் ஒரு கப்பல் முற்றாக சேதமடைந்தது.

இக்கப்பல் பாவிக்கப்படாத நிலையில் திருகோணமலை கடற்படை தளத்தின் கரையோரத்தில் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1990க்கு முன்னர் மூதூரில் இருந்து திருகோணமலைக்கு லோன்ஞ் மூலம் செல்லும்போது கடற்படைத் தளத்தின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கருமை நிறத்திலான அந்த கப்பலை காண முடிந்தது.

### ஷாபி நகரில் ஜப்பானிய விமானம் விழுந்த கதை :

09.04.1942 ஆம் ஆண்டு பிரித்தானிய கப்பல்கள் மீது ஜப்பானிய விமானம் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதற்குப் பதிலடியாக பிரித்தானிய யுத்தக் கப்பல்கள் ஜப்பானிய விமானங்கள் மீது தாக்குதல்கள் நடத்தின. இதில் ஜப்பானிய விமானம் ஒன்று சேதமடைந்தது. இவ்விமானம் திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்து மூதூர் வான்வழி ஊடாக தாளப்பறந்து சென்றது.

பிரித்தானியரின் தாக்குதலில் சேதம் அடைந்த விமானம் தாளப் பறந்து சென்று,மூதூர் ஷாபிநகரில் (இலுப்பைச் சோலை) எனும் இடத்தில் தற்போது தி/மூ/இமாம் ஷாபி வித்தியாலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து 300 மீட்டர் தூரத்தில் உள்ள ஜனாப் சேகு ஆலிம் என்பவரின் காணியில் இருந்த புளிய மரத்தின் மீது மோதி தரையில் விழுந்தது.

பிரித்தானியரின் தாக்குதலில் சேதம் அடைந்த விமானம் தாளப் பறந்து சென்று, மூதூர் ஷாபிநகரில் (இலுப்பைச் சோலை) எனும் இடத்தில் தற்போது தி/மூ/இமாம் ஷாபி வித்தியாலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து 300 மீட்டர் தூரத்தில் உள்ள ஜனாப் சேகு ஆலிம் என்பவரின் காணியில் இருந்த புளிய மரத்தின் மீது மோதி தரையில் விழுந்தது.

விமானம் விழுந்த இடம் தற்போது ஷாபிநகர் பள்ளிவாசல் அருகே உள்ள மர்ஹூம் ரிசானா நபீக் முன்னர் குடியிருந்த வீட்டின் அருகில் உள்ள காணியிலேயே விமானம் விழுந்து எரிந்தது. அவ்விமானத்தின் விமானியை பொதுமக்கள் எறிகாயங்களுடன் காப்பாற்றி மூதூர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

எரிந்த நிலையில் முற்றாக சேதமடைந்த விமானத்தின் எஞ்சிய பிரதான பகுதிகள் 1985 ஆம் ஆண்டு வரை அவ்விடத்திலேயே காணப்பட்டன.

தகவல்:

(1). காசிலெப்பை முகம்மது சரிபு

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

(2). கங்கைத்துறை மரைக்கார் அப்துல் வாகிது.



மூதூர் வரலாறு

தொடர்:10

M.S.M.Bishri - BBA, PGDE













# Film Festival Mega Night 2023

மூதூர் குறுந்திரைப்படத் துறைசார்ந்த கலைஞர்களின் ஒன்றுகூடல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை 24.02.2023 ஆம் திகதி மாலை 6.30 மணி அளவில் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் **"மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின்"** அனுசரணையில் இடம்பெற்றது.

**வெளியிடப்பட்ட குறுந்திரைப்படங்கள்**

**உருட்டு**

சம கால இலங்கை மக்களின் அரசியல் நிலைப்பாடு சம்மந்தப்பட்ட திரைப்படம்

**அறுவதை**

பசளை இல்லாத விவசாயிகளின் வாழ்க்கை பிரச்சினைகளை குறிக்கும் திரைப்படம்

**டிமிக்கி**

வாகன விற்பனையில் நடக்கும் மோசடி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படம்

**அடையல்**

கூ (பாதனி) இல்லாத பாடசாலை மாணவர்களின் நிலை குறித்து பேசும் இந்த திரைப்படம் மத்திய கல்லூரியின் ஒத்துழைப்போடு உருவாக்கப்பட்ட திரைப்படம்

***EXE***

சைத்தான்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் யுத்தம் நடந்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனை திகில் கதை

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை இலங்கை நிருவாக சேவை (SLAS) அதிகாரி எம். சீ. எம். செரீப், மூதூர் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் ஏ.எம்.முகைதீன், செயலாளர் ஏ.எஸ். உபைதுல்லா அவர்களும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் நடிகர், இயக்குனர், ஒளிப்பதிவாளர், படத் தொகுப்பாளர் மற்றும் பாடகர்கள் என்று மூதூர் பிரதேசத்தை சேர்ந்த 44 கலைஞர்களுக்கு சான்றிதழ்களும் 20 கலைஞர்களுக்கு நினைவுச் சின்னங் களும் வழங்கி வைக்கப்பட்டன.

இயக்குனர் புஹாரி அர்ஷாத் அவர்களின் தலைமையில் 5 குறுந்திரைப்படங்கள் Film Festival Mega Night 2023 நிகழ்வில் வெளியீடு செய்து மூதூர் வரலாற்று சாதனையாக பதிவாகி அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை விசேட அம்சமாகும்.

மிகக்குறுகிய காலத்தில் மூதூரில் குறுந்திரைப்பட பயணம் திருப்தியளிக்கும் எல்லையை கடந்துள்ளது. இவ்வாறான வெளியீடுகளுக்கும், படைப்புகளிற்கும் கிடைக்கும் சமூக அங்கீகாரமும், கலைஞர்களின் ஈடுபாடும் இதன் வெற்றிக்கு வழிவகுத்துள்ளது.






## பள்ளிவாயல் நிர்வாக சபை கௌரவிப்பு

**மூ**தூர் கேனிக்காடு தாருல் ஹீதா பள்ளிவாயல் பரி-பாலனை சபை இதற்கு முன்னர் பணியாற்றிய பழைய பரிபாலனை சபை உறுப்பினர்களை நேற்று (06.01.2023) மாலை 8.00 மணி (இஷா தொழுகையின் பிற்பாடு) பொதுமக்கள் முன்னிலையில் கௌரவிப்பு செய்தனர்.

இந்நிகழ்வில் மூதூர் அனைத்து பள்ளிவாயல்கள் தலைவர் எம்.தஷ்ரிக் அவர்களும், முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் எம்.நிம்ஷாத் அவர்களும் அதிதிகளாக கலந்து சிறப்பித்ததோடு இந்நிகழ்வு மூதூரின் அனைத்து பள்ளிவாயல் நிறுவாகத்திற்கும் முன்மாதிரியான செயற்பாடு என்று புதிய நிர்வாகசபை உறுப்பினர்களை




## சர்வதேச மகளிர் தின நிகழ்வு




**சர்வதேச மகளிர் தினதின் கொண்டாட்ட நிகழ்வானது மூதூர், இரால்குழி தி/ மூ/ கஜமுகா வித்தியாலயத்தில் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த (2023/03/14) சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மூதூர் பிரதேச செயலாளர் MBM. முபாறக் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் சிறந்த பெண்மணிக்கான விருதினையும், சிறந்த பெண் தொழில் முயற்சியாளருக்கான விருதினையும் வழங்கி வைத்தார்.

## மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்கு மாவட்டத்தில் இரண்டாமிடம்




**தி**ருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள சுகாதார வைத்தியதிகாரி அலுவலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 12 பொது சுகாதார மருத்துவ மாது பிரிவுகளில் “அன்னையர் ஆதரவு குழு” (Mother Support Group) உருவாக்கம் மற்றும் அதன் செயற்பாடுகளை சிறப்பாக பேணியமைக்காக மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலத்தின் தோப்பூர் பகுதிக்கான PHM B.F.Shihana அவர்களுக்கு மாவட்டத்தில் இரண்டாமிடம் பெற்றமைக்காக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அவர்களால் விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இதற்கு வழிகாட்டிய மூதூர் MOH Dr.Hilmy Mohideen Bawa மற்றும் SPHM மற்றும் ஏனைய அனைத்து உத்தி யோகத்தர்களுக்கும் திறம்பட செயற்பட்ட BF.Sihana PHM அவர்களுக்கும் எமது அலுவலகம் சார்பான மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.




## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

**மி**ன்சாரப்பட்டியல் கட்டண உயர்வு, தேர்தல் புறக்கணிப்பு, விலைவாசி அதிகரிப்பு போன்ற இடர்களுக்கு எதிரான அமைதிவழிப் போராட்டம் தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் மூதூர் பிரதேச சபை முன்பாக கடந்த 04.03.2023 மாலை ***4.00*** மணி அளவில் மக்களை விழிப்புணர்வூட்டும் ஜனநாயக அமைதி போராட்டம் நடைபெற்றது.



## பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தேர்வும்




**மூ**தூர் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிருவாக சபை தெரிவும் கடந்த ***26.02.2023*** (ஞாயிறு) மூதூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அந்தவகையில், தலைவர் பதவிக்காக ***04*** பேர் போட்டி யிட்டனர் அதிலிருந்து பெரும்பான்மை வாக்குகளினால் புதிய தலைவராக ஈராக் கழகத்திலிருந்து போட்டியிட்ட அப்துல் காதர் தெரிவு செய்யப்பட்டார்.

2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் படி மூதூர் வலயத்தில் தரம் 5 மாணவர்கள் கொண்ட 82 பாடசாலைகளில் இருந்து 1146 மாணவர்கள் பரீட்ச்சைக்கு தகுதி பெற்று 1098 மாணவர்கள் பரீட்ச்சைக்கு தோற்றியுள்ளனர். இவர்களில் 962 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று அடிப்படைச் சித்தியை வெளிகட்டியுள்ளனர். இதே வேளை மாவட்ட வெட்டுப்புள்ளியை (தமிழ்-142, சிங்களம் -147) தாண்டி 171 மாணவர்களும் சிறப்பு சித்தியை எய்துள்ளமை விசேட அம்சமாகும்.



**இப்பெறுப்பேற்றின் அடிப்படையில்**

70 அடிப்படை சித்தி தரப்படுத்தல் பட்டியலின் படி வலயத்தை சேர்ந்த 27 பாடசாலைகள் 100% பெறுபேற்று அடைவை காட்டியுள்ளமை பாரியதொரு வெற்றியாக கருத்தப்படவேண்டிய விடயம் ஒன்றாகும். இதேவேளை வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையின் வகைப்படுத்தளில் முதல் 3 இடங்களை தி/மூ/அந்நஹார் பெண்கள் ம.வி (19 மாணவர்கள்) , நஜீப் அப்துல் மஜீத் (19 மாணவர்கள்) மற்றும் மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி (12 மாணவர்கள்) பெற்றுக்கொண்டுள்ளன. இதேவேளை வலயத்தில் வெட்டுப்புள்ளி சதவீத அடிப்படையில் 75மூ சித்தியை வெளிக்காட்டியுள்ள வட்டவான் ஸ்ரீ தந்தோன்ரீஸ்வரன் வித்தியாலயம் முதலிடம் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

# மூதூர் வலயம் 2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் பகுப்பாய்வு

தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்ட தரப்படுத்தளில் **மூதூர் கல்வி வலயம்**

- தேசிய ரீதியில் - 89
- மாகணமட்ட ரீதியில் - 11
- மாவட்டமட்ட ரீதியில் - 02



மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவிற்குட்பட்ட 82 பாடசாலைக-ளில் இருந்து வலயத்தில் அதிகூடிய புள்ளி பெற்று 180 புள்ளிகளை பெற்று வலயத்தில் முதல்நிலை மாணவராக சாதனையை நிலைநாட்டியுளார் தி/மூ/ நஜீப் அப்துல் மஜீத் பாடசாலையின் மாணவரான **"அபுல் ஹசன் முஹம்மது அப்துல்லாஹ்"**.

பாடசாலை ரீதியாக கடந்த ஆண்டை விட இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடைவுவீதம் உயர்வை காட்டி நிற்கின்றது. பல சவால்களுக்கு மத்தியில் திட்டமிட்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பு செய்த வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி **முனவ்வரா நளீம்** மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப் **எம்.ஸியாத்,** உதவி வலயக்கல்வி பணிப்பாளர் **எஸ்.தாரிக், எம்.எம்.அப்பாஸ்,** ஆகியோரோடு வலயக்கல்வி அலுவலக உத்தியோகதத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர் என்பவர்களுக்கும் குறிப்பாக பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவ்விடத்தில் நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.


**Grade 5 Scholarship Result Analysis - 2022 - Eastern Province**

**Zone : Mutur**

| No | Name of the School | Number of Students Applied (2022) | Number of Students Sat (2022) | Number of Students scored above 70 | Percentage (Above 70 / Total Students Sat) | Above Cut-off | Percentage (Above Cut-off / Total Students Sat) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | T/Mu/Amman Nagar Ambal Vidyalayam | 7 | 7 | 7 | 100.00 | 1 | 14.29 |
| 2 | T/Mu/An.Nahar Girls' Maha Vidyalayam | 58 | 58 | 58 | 100.00 | 19 | 32.76 |
| 3 | T/Mu/Arafa Nagar Govt. Muslim Mixed School | 8 | 8 | 8 | 100.00 | 0 | 0.00 |
| 4 | T/Mu/Chenaiyoor Vidyalayam | 3 | 3 | 3 | 100.00 | 0 | 0.00 |
| 5 | T/Mu/Elankaithurai Allaimakal Vidyalayam | 4 | 4 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 6 | T/Mu/Furkkaniya Vidyalayam | 30 | 30 | 30 | 100.00 | 3 | 10.00 |
| 7 | T/Mu/Kadarkaraichchenai G.T.M.S. | 6 | 5 | 5 | 100.00 | 1 | 20.00 |
| 8 | T/Mu/Vipulananda Vidyalayam | 14 | 14 | 14 | 100.00 | 4 | 28.57 |
| 9 | T/Mu/Karukkamunai G.T.M.S. | 4 | 4 | 4 | 100.00 | 1 | 25.00 |
| 10 | T/Mu/Kooba Vid | 4 | 4 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 11 | T/Mu/Lingapuram Saraswathy Vidyalayam | 13 | 13 | 13 | 100.00 | 3 | 23.08 |
| 12 | T/Mu/Thuvaraka Vidyalayam | 17 | 11 | 11 | 100.00 | 0 | 0.00 |
| 13 | T/Mu/Menkamam G.T.M.S. | 10 | 10 | 10 | 100.00 | 2 | 20.00 |
| 14 | T/Mu/Mudduchchenai G.T.M.S. | 12 | 11 | 11 | 100.00 | 1 | 9.09 |
| 15 | T/Mu/Paddithidal Maha Vidyalayam | 19 | 19 | 19 | 100.00 | 9 | 47.37 |
| 16 | T/Mu/Puvaneswary Vidyalayam | 4 | 4 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 17 | T/Mu/Sri Kajamugah Tamil Vidyalayam | 10 | 9 | 9 | 100.00 | 0 | 0.00 |
| 18 | T/Mu/Sacred Heart Vidyalayam | 13 | 12 | 12 | 100.00 | 5 | 41.67 |
| 19 | T/Mu/Sampur Sri Murugan Vidyalayam | 7 | 7 | 7 | 100.00 | 1 | 14.29 |
| 20 | T/Mu/Seenanveli Athavan Vidyalayam | 4 | 4 | 4 | 100.00 | 1 | 25.00 |
| 21 | T/Mu/Shivananda Kanista Vidyalayam | 22 | 15 | 15 | 100.00 | 2 | 13.33 |
| 22 | T/Mu/Sinnakkulam G.T.M.S. | 7 | 7 | 7 | 100.00 | 1 | 14.29 |
| 23 | T/Mu/Kiravarkuli Sivashakthy Vidyalayam | 8 | 8 | 8 | 100.00 | 0 | 0.00 |
| 24 | T/Mu/Soodai Kudha Barathy Vidyalayam | 1 | 1 | 1 | 100.00 | 0 | 0.00 |
| 25 | T/Mu/Sri Ganesha Vidyalayam | 8 | 8 | 8 | 100.00 | 2 | 25.00 |
| 26 | T/Mu/Vaddavan Sri Thanthonreeswaran Vidyalayam | 6 | 4 | 4 | 100.00 | 3 | 75.00 |
| 27 | T/Mu/Valaiththoddam G.T.M.S. | 10 | 8 | 8 | 100.00 | 0 | 0.00 |

# 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேற்றின் பகுப்பாய்வு

இம் முறை வெளியாகியுள்ள 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகளின் பிரகாரம் மூதூர் வலயத்தில் 35 க.பொ.த சாதாரணதர பாடசாலைகளில் இருந்து 1104 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 638 மாணவர்கள் 3C, 3S யும் 768 மாணவர்கள் 3C, 2S மேல் சித்தியும் அடைந்து G.C.E (A/L) கற்பதற்கு மூதூர் வலயத்தில் தகுதி பெற்றுள்ளனர்.








இப்பெறுப்பேற்றின் அடிப்படையில் உயர்தரம் கற்பதற்கான அடிப்படை தகமை பெற்றுள்ள மாணவர்களில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட சித்தி சதவீதம் இம்முறை மூதூர் வலயத்தில் 60% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பாடரீதியாக பாடசாலைகளின் தரப்படுத்தளில் இருதயபுர வித்தியாலயம் இம்முறை 100% சித்தியை வெளிக்காட்டி வரலாற்று சாதனையும் நிகழ்த்தியுள்ளமை விசேட அம்சாமாகும்.


அத்துடன், 57.79 %, 69.57 % வளர்ச்சியை காட்டி நிற்பதோடு, 2020 ஆண்டை விட 3% வளர்ச்சியை, காட்டுகிறது. தேசிய ரீதியில் 100 வலயங்களில் இம்முறை 84 ஆவது இடத்தையும், 2020 இல் 88 ஆம் இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.




தேசிய ரீதியில் திருகோணமலை மாவட்டத்தின் கல்வி வலயங்களின் நிலை.

- மூதூர் - 84
- திருகோணமலை - 93
- கிண்ணியா - 95
- கந்தளாய் - 99
- திருகோணமலை வடக்கு - 100










பகுப்பாய்வுகளின் அடிப்படையில் பாடரீதியாக சதவீதம் 2020 ஆண்டிலும் பார்க்க 2021 ஆம் ஆண்டு பெறுபேறு சற்று உயர்ச்சியை காண்பிக்கின்றது. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் ஒப்பீட்டளவில் ஏனைய பாடங்களை விட உயர்ச்சியை காட்டுகின்றன.

**மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவிற்குட்பட்ட 35 பாடசாலைகளில் 13 மாணவர்கள் "9A"சிறப்பு சித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர்.**







### "9A" *Students Name List*

**T/Mu/An-Nahar Girls Maha Viddiyalaya**

- Razeen Himasha Noory
- Rizvi Zeenath Amani
- Nazeer Fathima Haneen
- Faizar Fathima Simha

**T/Mu/Muthur Central College**

- Thowfeek Sahna
- Sameem Mohamed Saif
- Saleem Shakeel

**T/Mu/Mutur Muslim Ladies College**

- Farees fathima Hana
- Ramlan Fathima Hima

**T/Mu/Al-Hamra Central College**


- Sathath Ahamad Samhan
- Hafees Ahamed Muqsith

**T/Mu/Al-Mina Maha Viddiyalaya**

- Hafeel Fathima Sajana

**T/Mu/Vipulanantha Viddiyalaya**









பாடசாலை ரீதியாக கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு க.பொ.த சாதரணதர பரீட்சை பெறுபேற்றின் அடைவுவீதம் உயர்வை காட்டியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த கொரோன சூழலில் திட்டமிட்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பு செய்த வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஸியாத், உதவி வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.தாரிக், எம்.எம்.அப்பாஸ், ஆகியோரோடு வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர் என்பவர்களுக்கும் குறிப்பாக பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவ்விடத்தில் நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

தகவல் தளம்
***மூதூர் வலயக்கல்வி அலுவலகம்***




ஆக்கம்
**இஹ்ஷான் ஜே.எம்.ஐ**





# ஆழிக்கடலில் அன்று

1993 ஜனவரி 25 மாலை வேளை திருகோணமலை இறங்குதுறையிலிருந்து மூதூர் இறங்குதுறைக்கு பயணமாகிறது லோஞ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் பயணிகள் படகு.

மிகக் கடுமையான கடல் சீற்றம் மழை என கடலில் கொந்தளிப்பு கடல்வழி பாதையில் அமைந்துள்ளது பாதாளமலைப்பகுதி கடல் நீரோட்டம் காரணமாக அந்தப்பகுதியின் ஆழம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என நினைக்கிறேன்.

அதிக பயணிகள் பொருட்கள் என நிறைந்த படகு அந்த படகை தவறவிட்டால் அடுத்த படகு இல்லை திருகோணமலை நகரத்தில் உள்ள சொந்தக்காரர் அல்லது வில்லூன்றி கந்தசாமி ஆலய யாத்திரிகர் மடத்தில் தங்க வேண்டும்.

நான் அறிகிறேன் அந்த காலத்தில் இது ஒன்றுதான் யாத்திரிகர் மடமாக இருந்தது என தங்களது வைத்திய மற்றும் அரசாங்க அலுவல்கள், வங்கிச் சேவைகள் என அனைத்திற்கும் மூதூரில் இருந்து நகரத்திற்கு வரவேண்டிய தேவை அதுபோல் தங்களது பிள்ளைகளை உயர்தரம் படிக்க அனுப்பிய பெற்றோர் எனப்பலரும் நகரத்திற்கு காலைப் படகில் மூதூரில் இருந்து வந்து தமது அலுவல்கள் முடிந்ததும் மீண்டும் ஊருக்கு திரும்பும் கடைசி படகு இதுதான்.

இந்த படகை தவறவிட்டால் அடுத்தநாள் காலை 7 மணிவரை காத்திருக்கும் நிலை உருவாகும்.

அதைவிட மூதூர் வியாபாரிகள் ஏத்தும் சீமேந்து மற்றும் கட்டடப் பொருட்கள் என அந்த படகு நிறைந்தே காணப்படும்.

அந்த நேரத்தில் ஊரிலிருந்து வெளியிடங்கள் அல்லது திருகோணமலை நகரத்திற்கு போவதென்றால் இராணுவ முகாமில் பதிந்து அனுமதி (Pass) எடுத்தே போக வேண்டும். அப்படி ஒரு கட்டுப்பாடு இராணுவ நிருவாகத்தால் எல்லா இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

துறைமுகத்திற்கு வரும்போதும் போகும் போதும் இந்த அனுமதி கடிதம் Pass இருக்க வேண்டும் இல்லாமல் நாம் யாரும் போனால் அந்தோ கதிதான் அடுத்து ஏதாவது ஒரு இராணுவ முகாம் சிறையில் இருப்போம் அல்லது காணமல் போனோர் பட்டியலில் இருப்போம்.

இப்படியான ஒரு இக்கட்டான காலத்தில் தான் அந்த சோகம் எம்மையெல்லாம் சூழ்ந்து கொள்கிறது ஆம் அன்று பயணித்த அந்த படகு பாதாளமலைப் பகுதியில் கடல் கொந்தளிப்பில் சிக்கி மூழ்கி விடுகிறது. பயணித்தவர்களின் நிலை அறிய முடியவில்லை. எனது அப்பாவும் சதாசிவம் பெரியப்பாவும் வங்கி அலுவலாக திருகோணமலை நகரத்திற்கு வந்தவர்கள். இந்த படகில் ஊருக்கு திரும்பியவர்கள் என்றும் கேள்வி அப்போது மூதூரில் தொலைபேசி வசதிகள் இல்லை கடிதப்போக்குவரத்து மட்டுமே தகவல் அறியும் சாதனம் அல்லது வானொலி சேவை எங்கள் ஊரில் அதுவும் கஷ்டம் ஏன் என்றால் மின்கலம் Battery பயன்படுத்த தடை இதனால் மதிவண்டியில் இருக்கும் சுழலி டைனமோ மூலமாகவே வானொலி பெட்டி இயக்கி செய்தி கேட்பது வழமை.

அன்று லோஞ் தாண்ட விடயம் ஊரெல்லாம் தீயாக பரவுகிறது எனது அப்பாவும் பெரியப்பாவும் வந்து கடலில் தாண்டுவிட்டார்கள் என்றும் பேசப்படுகிறது.

வீடு முழுவதும் அழுகைச்சத்தம் உறவினர்கள் எல்லோரும் கூடிவிட்டனர். தகவல் அறிய வழியில்லை இரவு நேரத்தில் எங்கே போவது அதுபோல் இராசமணி மாமியும் இந்த படகில் பயணம் செய்துள்ளார் அது பெரிதாக ஆட்களுக்கு தெரியவில்லை ஏனெனில் அவர் மூதூர் யூனியன் என்று சொல்லப்படும் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் முகாமையாளராக இருந்தவர் அத்தோடு மூதூரில் குடியிருந்தவர்.

ஒரு தகவலும் கிடைக்கவில்லை இரவு முழுவதும் முழித்து விடிந்ததும் எங்கள் குடும்பம் ஊர்மக்கள் என எல்லோரும் மூதூர் (ஜெற்றி) இறங்குதுறைக்கு போய் காத்துகிடக்க சில சில தகவல்கள் வருகிறது சிலரின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளது. சிலர் நீந்தி கரை சேர்ந்தும் சிலரை நேவிக்காரர்கள் காப்பாத்திய தாகவும்.

அப்பாவின் நிலை அறிய முடியவில்லை. காலை பதினொரு மணியளவில் தகவல் கிடைக்கிறது அப்பாவும் சதாசிவம் பெரியப்பாவும் உயிரோடு இருப்பதாகவும் அவர்கள் அந்த லோஞ்சில் பயணம் செய்யவில்லை என்றும். இவர்கள் வங்கி அலுவல் முடித்து துறைமுகத்திற்கு வந்த போது லோஞ் அணைத் தூணில் இருந்து விடுபட்டு சிறுதூரம் கடலுக்குள் சென்றதால் அதில் ஏறமுடியாமல் போய்விட்டது. அதனால் அப்படியே போய் கந்தசாமி கோவில் மடத்தில் தங்கி விட்டனர்.





**கனேசமூர்த்தி ஜெயபிரகாஸ்**
**சிறுகதை எழுத்தாளர்**
**மல்லிகைத்தீவு மூதூர்**

இதனை அப்போது திருகோணமலை தபால் கந்தோர் சந்தியில் பிரகாஷ் நகைக்கடை வைத்திருந்த செல்லக்குமார் என்று சொல்லப்படும் சிற்றம்பலம் பெரியப்பா பொலிஸ் உதவியுடன் முதுருக்கு இன்னு மோர் படகில் வந்து சொல்லி அறிந்தோம்.

அதேவேளை அவரின் அக்கா இராசமணி மாமி கடலில் மூழ்கி சாவடைந்துவிட்டா..

இதுவரை 97 பேர் அந்த படகுவிபத்தில் கடலில் மூழ்கி இறந்தாக தகவல் எனக்கு இன்னும் சரியாக தெரியவில்லை.

இதைவிட பல தகவல்கள் உங்களில் பலருக்கு தெரிந்திருக்கும் இது என் நினைவில் இருந்தது. அடுத்த நாள் காலையில் மூதூர் ஜெற்றியில் அழுது கொண்டே இருந்தேன்

**30 வருட நினைவு நாளுக்காக.**
**ஓம் சாந்தி.**
**நன்றி.**
**இது ஒரு நினைவுப் பகிர்வு**






# Noor Education Design Centre திறந்துவைப்பு



கடந்த 12 ஆண்டுகள் மேலாக மூதூர் மண்ணால் கட்டிடக்கலை தொடர்பான கற்கை நெறியை மேற்கொண்டுவரும் Noor Education Design Centre ஸ்தாபனத்தின் பிரதான காரியாலயம் மற்றும் கற்கை வளாகம் இன்று (07-11-2022) ஆம் திகதியன்று மட்டக்களப்பு நெடுஞ்சாலை வீதியில் (மூதூர் மத்தியக்கல்லூரி மைதானம் முன்பாக) திறந்துவைப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் பெரியபள்ளிவாயல் நிர்வாசபை தலைவர் ஜனாப் எம்.எம்.ரபீக் அவர்களும் பள்ளிவாயல் தலைமையை இமாம் ஏ.எஸ்.ஆஸிம் அவர்களோடு நிறுவன பணிப்பாளர் ஏ.ஏ.எம்.நூஜ்கான் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இக்கல்வி நிலையத்தின் மூலமாக இதுவரை 740 க்கு மேற்பட்ட மாணவர்கள் Auto CAD, MEP and ICT கற்கை நிறைவு செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்வாய்ப்பை பெற்று பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.



2012 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சென்டர் ஆனது நெக்ஸ் வீதியில் இயங்கி வந்ததுடன் தற்பொழுது திருவோணமலை வீதியில் மூதூர் மத்திய கல்லூரி மைதானத்துக்கு அருகாமையில் புதிய பரிமாணத்தின் ஆரம்பிக்கப்பட்டு இதன் மூலம் புதிய பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்ற அந்த வகையில் ICT, Elder Care, Nursing Assistant English அத்துடன் பல்கலைக்கழகம் சொல்லும் மாணவர்கள் பொறியியல் துறை மற்றும் இன்ஜினியரிங் டெக்னாலஜி பயிலும் மாணவர்களுக்கும் இது மிகவும் பிரயோசன-மாக உள்ளமை விசேட அம்சமாகும்.





## புதிய அதிபர் நியமனம்

### தி/மூ/அல் ஹிதாயா ம.வி



இவ்வருடத்திற்கான வருடாந்த அதிபர் இடமாற்றத்திற்கு அமைவாக த/மூ/அல்ஹிதாயா மகா வித்தியாலத்தின் புதிய அதிபராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் EP3/1/1/16/2022 இலக்க கடிதத்திற்கமைவாக 2023.01.03 அன்று செயற்படும் வண்ணம் தி/மூ/அல் ஹிதாயா மவி பாடசாலையின் புதிய அதிபர் கடமையை இலங்கை அதிபர் சேவை தரம் – ii இனைச் சேர்ந்த **முகமட் சம்சுதீன் ஹில்மி** அவர்கள் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் 2005.09.01 – 2008.08.31 வரை Save the Children Project Officer ஆகவும், 2008 .08.01 முதல் நியமனம் முதல் பாட – சாலை அல் தாஜ் ம.வி, தொடர்ச்சியாக2008.08.01 – 2008.11.19 சதாம் வித், 2008.11.20 – 2011.12.31, ஆயிஷா வித் 2012.01.01 – 2017.01.31 தாருல் ஜன்னாஹ் வித் 2017.02.01 – 2023.01.04 அதிபராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. தான் கடமையாற்றிய பாடசாலைகளில் சிறந்த நிருவாகத்தை ஆற்றியதோடு சிறந்த பெறுபேறுகளையும், தேசிய சாதனை–களையும் மாணவர்களை கொண்டு நிகழ்த்தியுள்ளார். எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகளையும், அடைவுகளையும் நிகழ்த்திக் காட்டுவார் என்று நம்பிக்கையுடன் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## சிறந்த சமூகப் பணிக்கான விருது



**75** வது தேசிய சுதந்திர தினத்தையொட்டி பொது நிருவாகம், உள்துறை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் பல துறைகள் இணைந்த ஜனாதிபதி செயலகத்தின் வழி காட்டுதலில், திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல போட்டி நிகழ்வுகளில் இருந்து மதிப்பீடு செய்யப் பட்டு சிறந்த சிரமதான சமூகப் பணிக்காக தெரிவாகி இரண்டாமிடத்தை மாவட்ட மட்டத்தில் மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் ஜாயா நகர் – ஜாயா நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் பெற்றுக் கொண்டது.

இவ்விருது வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இன்று (04-02-2023) நடைபெற்ற 75 வது தேசிய சுதந்திர தின நிகழ்வு விழாவில் கிழக்கு மாகாண செயலாளர் Mr.ரத்நாயக்கா அவர்களினால் ஜாயா நகர் RDS தலைவர் Mr.V.M.M. ஹஸீன் மற்றும் செயலாளர் Mr.B.M.சக்ரி ஆகியோருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## பேசும் மௌனமே

உன் பெயர்
சொல்ல தயங்குகிறேன்

நீ மெய் சொல்லி போகிறாய்

உனை காண
கண்கள் மூடுகிறேன்

நீ மெய்
வருடி போகிறாய்


உன்னில் என்
சுவாசம் விதைத்திருப்பேன்

என்னில் நீ புக
காத்திருப்பேன்

உன் வார்த்தையில்
நான் மௌனிப்பேன்

என் மொழிகளை
உன்னில்
தொலைத்துவிட்டேன்.
"குட்டி பாரதி"

ஐ. பாத்திமா பாஜிலா,
கல்முனை,
அம்பாறை.



நான்கு சுவர்களுக்குள்
சுதந்திரமிழந்து போனது என் வாழ்க்கை
கனவுகளால் நிறைந்த நான்
அந்த சுவர்களுக்கு அப்பால்
எட்டிப்பாய்ந்து ஏதுமற்ற நாளைக்காக
அதன் நீட்சிக்காக நீண்ட நேர
காத்திருப்பொன்றிகாக
காத்திருக்கிறேன்

வெறுமை மொய்த்த மன வெளி
கழிந்து போன நினைப்புகளை அணிந்துகொண்டு
வீதி வலமொன்றிற்கு தயாராகிறது
மிடுக்கோடு

கோடுகளுக்குள் சிக்குண்ட
நிகழ்காலம் நீள மறுப்பதும்
நீர்த்துப்போகப்போகும் வருங்காலமும் கூட
வராமலையே போகலாம்

எனக்கான எனது உரிமங்கள்
மறுக்கப்பட்ட பட்டியலொன்றில்
சேர்க்கப்பட்டு என் குரல்
அகாலமொன்றால் நெரிக்கப்படலாம்

அன்றென் கனவுகள் விழிபிதுங்கி
வெறித்தபடி பார்க்கும் இந்த உலகத்தை

ஆரம்ப புள்ளியிடப்பட்ட என் வியாபிப்புகள்
மறுக்கப்பட்டு அந்த அகாலத்தின் கரங்களில்
திணிக்கப்பட்ட போது

நாளை பற்றிய உருவேற்க காத்திருந்த
காலம் வழிமறிக்கப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டது

சிறைப்பட்ட சுவர்களுக்குள்
நான் எனும் நாளைய கனவுகள்
அணிந்துகொண்ட அகாலத்தின் அச்சம்
ஒன்றைத்தவிர முழுவதும்
துச்சாதன வெறியர்களால்
துகிலுரியப்பட

அகாலத்தின் ஆதியாக
நிர்வான உடை போர்த்திக்கொண்டது
எனக்கென அன்றெழுந்த அகாலத்தின் குரல்



**பிரியங்கன் பாக்கியரத்தினம்**
**சம்பூர்**
**அறிவிப்பாளர் ஐ.பி.சி.தமிழ்**

## வரம் தா இறைவா

சிலையாய் நீயிராமல்
 சிந்தையில் உனை இருத்தும்
நிலையினையே தந்தெனக்கு
 வரமொன்றைத் தா இறைவா

காட்டாற்று வெள்ளம் போல்
 கரைபுரண்டு ஓடுகின்ற
பாட்டினை எழுதுகின்ற
 பாவலனாய் மாற்றிவிடு

பொல்லாத உலகினிலே
 பொறுமையுடன் நான் வாழ
நல்லசெயல் களிலே
 நாட்டத்தை தந்து விடு

பஞ்சம் வந்தென்னை
 பாழாக்கிப் போட்டாலும்
நெஞ்சம் தன்னில் என்றும்
 நிலையான உறுதி கொடு

நாள் தோறும் உன்னன்பில்
 நான் நிலைத்து மகிழுகின்ற
வாழ்வினையே எந்தனுக்கு
 இறைவா நீ தந்திடுவாய் !..

**கௌ.மோகனா**



## என் மொத்தமும் நீயே!

நித்தமும் என் கனவுகளை நெஞ்சில் சுமக்கும்,
என் வாழ்வின் மொத்தமும் நீயே!

கருவிலே எனை சுமந்தவள் தாயே..
காலம் முழுதும் எனை
சுமப்பவன் நீயே...!!

கருணையை என்னில் பொழிந்தாயே...!
காவலனாய் என்னை காத்தாயே...!

அப்பா...! எனது ஆசைகளை நிறைவேற்ற,
உனது ஆசைகளை துறந்தாய்...!

அதனால் தானே அவசரமாக வெளிநாட்டுக்கும்,
பறந்தாய்...!

அப்பா...! எனது எதிர்காலத்திற்கு வழிகளை நீ
தானே திறந்தாய்...!

அதனால் ஏற்ப்பட்ட உனது வலிகளையும் கூட நீ
மறந்தாய்...!

அப்பா... உனக்கென்று நன்றி சொல்ல,
எனக்கேது வரிகளப்பா!

எனக்கென்று நீ செய்தவைகள்,
உலகைவிடவும் பெரிது அப்பா...!



ஹ'ஸ்னா நலீம்.
அத்தலபிடிய ,
ஹிங்குல.


உங்கள் கவிதை ஆக்கங்களை பிரசுரிக்க
0717891887
என்ற WhatsApp இலக்கத்திற்கு
அனுப்பி வையுங்கள்


## செந்தமிழின் செழுமை

தென்பொதிகை மன்றமெங்கும்
தவழ்ந்துவந்த தென்றலே!
செந்தேனைச் சிந்துகின்ற நறுமலரே !
சீரிளமைச் சொற்களிலே
தீஞ்சுவையிடும் கன்னலே!
கம்பனின் கவிகளிலே
கசிந்தொழுகும் கனிச்சாறே!
முச்சங்கம் வளர்த்திட்ட
முத்தமிழ் செல்வியே!

எழுசீருடைய எழிலினில்
அவனியில் இலங்கிடும்,
அமுதமெனும் முப்பாலே!!
இலக்கணமும் இலக்கியமும்
இனிமையில் விளக்கிடும்,
இன்தமிழ் செந்தமிழே!

பண்ணிசை பாடிடச் சந்தங்கள்
தந்திடும் இன்னிசையே!
பூந்தமிழினில் பாரதிபடைத்திட்ட
புதுக்கவிதைச் சரங்களே!

தீஞ்சுவைத் தமிழணங்கின்
தேன்கவிகளை நயந்திடுவோம்!
பாரினிற் பரிமளப் பக்குவம்
பவனிவரப் பாக்களைப்
புனைந்திடுவோம்!

கிண்ணியா சபீனா



# குழந்தைகளின் பார்வைப் புலனை கேள்விக்குறியாக்கியுள்ள ஸ்மார்ட் போன் பாவனை

உலக தொழிநுட்ப வளர்ச்சியில் MOBILEPHONE பாவனை உச்சத்தை எட்டியுள்ளது. எதை வேண்டுமானாலும் இழந்து வாழமுடியும் ஆனால். MOBILE PHONE இல்லாமல் வாழமுடியாத ஒரு நிர்ப்பந்தமான நிலைமை உருவாகியுள்ளது. இதனுடைய தேவையும், பயன்பாடும் அதிகமாக உணரப்பட்டாலும். தேவைக்குப் பயன்படுத்துவோர் குறைந்த அளவில் தான் காணப்படுகிறார்கள் ஆனால் சமூகவலைத்தளங்களான (socal mediacs) போன்றதை மைப்படுத்தி MOBILE PHONE பாவனை இன்று போதைப்பொருளைப்போன்ற அடிமையாதல் (addiction) நிலைமையை ஏற்படுத்தி இருப்பது பலர் அரியாத உண்மையாகும். இதன் மூலம் இளை ஓர்சமுகம். பல்வேறுபட்ட உடல்,உள,சமூக, கலாச்சார ரீதியான மிக பயங்கரமான பிரச்சினைகளுகளுள் உள்வதனங்கப்பட்டிருப்பதை . இன்று நாம் ஊடங்கள் மூலமாக தினமும் பார்த்தும், கேட்டும் வருகின்றோம். இது ஒரு புறம் இருக்க. இலங்கையில் மக்கள் தொலைகாட்சித் தொகுப்பு மற்றும் புள்ளியியல் துறை (Deportment of census and statistics) (DCS) ன். வொளியிட்டுள்ள தரவுகனின் அடிப்படையில் மொத்த இணையப் பாவனைகளில் சிறுவர்களில் 79.1% ஆனவர்களில் 5-9 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் என்பதாக மிகவும் அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டுள்ளது மேலும். இவர்களுக்கு அடுத்தபடியாக 20-25 வயதிற்குட் பட்டவர்களின் 78.2% அவைகள் இணையத்தைப் பயன்படுத்துவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.



ஏன் இதைவிட 1 படிமேலாகச் சென்று பார்த்தால் இந்த smart phone பச்சிளம் பார்வைகள் கூட (0-2 years) விட்டு வைக்கவில்லை. அந்த காலத்தில் நிலவை காட்டி உணவுஊட்டிய காலம் இருந்தது. அதில் பல அறிவார்ந்த பல நன்மைகள் இருந்தது. ஆனால் இன்று வீடியோ (video)வைக் காட்டி உணவு ஊட்டுபவர்கள் அதிகரித்து விட்டார்கள் இதன் விளைவாக உணவின் மூலம் கிடைக்கின்ற போசைனையை விட, smartphones மூலம் அந்த பச்சிளம் பால்கள் அவர்களுடைய எதிர் காலத்தில் நோயளார்களாக மாறுவதற்குரிய வேலையை நாம் செய்து வருகிறோம்.இதை நான் சொல்வதாக இருந்தால் சொந்தக் காசில் தனக்கே தான் சூனியம் செய்வதை ஒத்த ஒரு செயற்பாடகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது.

இத்த smartphoned எதிர் விளைவுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். மாறாக குழந்தைகளின் mobile phone எவ்வாறான மோசமான விளைவுகளை ஏற்படுத்து கிறது என்று பார்க்கும் போது இந்த mobile phone ல். இருந்து Radio freguenw Radiation என்கிற கதிர்இயக்க அதிர் வெண் கதிர்வீச்சு வெளியேறுகிறது. இந்த கதிர்வீச்சுக்கு நாம் எமது வாலிப பருவத்தில் ஆளாகினோம், ஆனால் என்ன பரிதாபம் இந்த கதிர்வீச்சுத் தாக்கத்திற்கு எமது பச்சிளம் குழந்தைகள் பிறந்த அன்றில் இருந்தே ஆளாக்கப்படுகிறது.

குழந்தையை அழுவதை நிப்பாட்டுவதற்கு, தாய்ப்பாலூட்டும் போது, குழந்தையை தூங்கவைப்பதற்கு மற்றும் உணவூட்டும் போது போன்ற பல சந்தர்ப்பங்களில் எமது mobilephone யை குழந்தைகளுக்கு கண்டிக்கிறோம். உண்மையில் இந்த கதிர்வீச்சின் (Radio Frequency)ன். முதற் குறிய மூளை என்பது பலர் அறியாத உண்மையாகும். மூளையின் வளர்ச்சியும் விருத்தியும், அடையும் இந்த வயது மற்றும் கண்ணில் மிக முக்கியமான பகுதியான விழித்திரை (Retine) என்று சொல்லக்கூடிய பார்வை புலனை மிக துல்லியமாக பிரித்து அறியக்கூடிய கலன்களை செறிவாக கொண்ட பகுதி, இந்த கதிர் வீச்சு தாக்கத்தின் மூலம் வெகுவாக பாதி க்கப்படுகிறது

2011ஆம் ஆண்டு (WHO) உலக சுகாதார ஸ்தாபனத்தினால் என்ற புற்றுநோய் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது மிக பிரசித்தி பெற்ற நிறுவனம் மிக முக்கிய ஆய்வுகளை வெளியிட்டிருந்தது அதில் இந்த Radio Frequency Radiation ன் 30KHz-300KHz வரையான கதிர்வீச்சுகள் புற்று நோயை உருவாக்கக் கூடிய தென்று சர்வதேச மாநாட்டில் மிகத் தெளிவாக அறிவித்துள்ளது. புற்றுநோய் என்பது கடந்த ஒரு தசாப்தங்களுக்கு முன்னால் எங்கேயோ, யாரோ ஒருவருக்கு காணப்பட்ட அந்த பயங்கரமான நோய் இன்று அதிகமான இடங்களில் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றது எதிர்காலத்தில் இந்த நோயின் கோரத்தாண்டவம் ஒவ்வொன்றும் வீட்டுக்கும் வீட்டுக்கும் இருக்கிறது என்பதை மிகவும் பொறுப்புடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இதற்கு மேலதிகமாக அதிகமாக ஆரம்ப காலத்தில் கூறியது போல விழித்திரை ஏற்பட்டு இருக்கின்ற பழைய இரசாயன மாற்றங்கள் அங்கு வளர்ச்சி அடையும் வளர்ச்சி யடைந்து வரும் பார்வை கலங்கள் பல மாற்றங்களை ஏற்படுத்தும் இதன் எதிர் ஒளியாக குழந்தைகளின் பார்வை சம்பந்தமாக பல குறைபாடுகளை பின் நாட்களில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது இதனை அண்மையில் பாடசாலை மட்டங்களில் மேற்கொண்ட ஆயுள் பல மாணவர்கள் பார்வை கோளாறுகளோடு அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள் இருக்கின்றனர்.

மேலும் இந்த mobilephone பாவனையின் மூலமாக தலைவலி அடிக்கடி வாந்தி, மயக்கம் தூக்கமின்மை, கோப மனப்பான்மை, நினைவாற்றல் குறைதல் போன்ற உடலியல் பல இடங்களின் நோவு போன்ற பல இன்னோரன்ன குணங்குறிகள் மாணவர்கள் மட்டத்தில் காணப்படுப்படுமாயின் அவர்களுக்கு, mobile phone க்கும் இடையிலான தொடர்பை ஆய்வு செய்யும் போது கண்டறியலாம் மேலும் பின் நாட்களில் மறதி நோய், Alzheimersdiseese, Parkinsonism Diseese போன்றவை வருவதற்கான வாய்ப்பு 70 வீதம் காணப்படுகிறது.

Dr. HM. Hariz (FGS/MSC/MAAI)

# கௌரவிப்பு  நிகழ்வுகள்

சேவை நலன் பாராட்டுதல் — பிரியாவிடை நிகழ்வுகள்

## எஸ்.மஜூன் அதிபர் அவர்கள் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு




தி/மூ/அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் S. மஜூன் அவர்கள் இன்று 2022.11.30 ஆந் திகதியுடன் 21 வருடங்கள் ஆசிரியராகவும், 14 வருடங்கள் அதிபராகவும் மொத்தம் 35 வருடகால கல்விப் பணியிலிருந்து தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறுகின்றார்.

இவர் சம்மூன் -அமீர் பீவி தம்பதியினருக்கு மகனாக 1962.12.01 ஆந் திகதி மூதூர் நொக்ஸ் வீதியில் பிறந்தார். இவர் தனது கல்வியை தி/மூதூர் மத்திய கல்லூரியில் கற்றார்.

* 1983/1984 காலப் பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகம் நுழைந்த இவர் 1987 யில் கலை மாணிப் பட்டம் (B. A) பெற்றார்
* 1988.05.19 ஆந் திகதி ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெற்று தி/மூதூர் மத்திய கல்லூரியில் கல்விப் பணியை ஆரம்பித்தார்.
* 1999.06.01 தொடக்கம் தற்போது அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் தி/மூ/அல்ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகி கடமை புரிந்த சம காலத்தில் இப் பாடசாலையின் உப அதிபராகவும் பணி புரிந்தார்.
* 2006.08.04 ஆந் திகதிய மூதூர் வெளி-யேற்றத்தின்போது மல்வானையில் தங்கியிருந்த இவர் தற்காலிக இணைப்புப் பெற்று கம்/அல்முபாரக் தேசியப் பாடசாலையின் உப அதிபராக 09 மாதங்கள் கடமையாற்றினார்.
* 2008.01.21 தொடக்கம் தி/மூ/அல்மனார் வித்தியாலயத்திற்கு அதிபராக நியமனம் கிடைக்கப்பெற்றது.
* 2006 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவைக்கு (SLPS) அதிபர் தரம் -II க்கு பதவி உயர்வு கிடைக்கப் பெற்றது.
* 2016.02.24 ஆந் திகதி தொடக்கம் தி/மூ/அல்ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார்.
* 20018.01.10 ஆந் திகதி இவருக்கு அதிபர் சேவை தரம் -1 பதவி உயர்வு அடைந்தார்.

இவர் ஒரு சமூக செயற்பாட்டாளரும் கூட. 1993 தொடக்கம் இந்த ஆண்டுவரை இரு தசாப்தங்களாக மூ தூர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக பணியாற்றி வருகிறார். 2018 தொடக்கம் கடந்த ஐந்து வருடங்களாக 89 பாடசாலைகளின் அதிபர்களைக் கொண்ட அதிபர்கள் சங்கத்தின் தலைவராவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இதனைவிட சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மூதூர் உபதலைவராகவும் செயற்பட்டு நற்பணிகள் ஆற்றி வருகின்றார்.









### ஓய்வுநிலை அடையும் அதிபர்

# க. பேரின்பநாதன்










தனது 37 ஆண்டுகால சேவையினை பூர்த்தி செய்து ஓய்வுபெறும் அதிபர் க.பேரின்பநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு

கடந்த டிசம்பர் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது "பேரின்பம்" என்ற சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

37 வருடகால கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறும் நிலையில் அவர் கல்வித்துறைக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை பாராட்டி பாடசாலைச் சமூகத்தினால் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது..

37வருட கல்விச் சேவையில் இருந்து 31.12.2022 அன்று ஓய்வு பெறும் க.பேரின்பநாதன் அவர்கள்..

- 15.07.1985 — ஆசிரியராக முதல் நியமனம்.
- 15.07.1985 — 18.01.1988 — பொலனறுவ – சுங்காவில் முஸ்லிம் வித்தியாலயம் ..
- ஆசிரியர் தரம் 3–II
- 19.01.1988 — 31.12.1989 — மட்டக்களப்பு – ஆசியர் கலாசாலை பயிற்சி ஆசிரியர்..
- 01.01.1990 — 29.01.1991 — பொலனறுவ – முத்துக்கல் தமிழ் வித்தியாலயம் ...
- 30.01.1991 — 28.02.1991 – மூதூர் – அம்மன்நகர் வித்தியாலயம்...
- ஆசிரியர் தரம் 3–II
- 01.03.1991 — 19.01.1992 – மூதூர் – அரிப்பு அ.த.க வித்தியாலயம் ....
- ஆசிரியர் தரம் 3–I
- 20.01.1992 — 20.01.1994 – மூதூர் – மேன்கமம் அ.த.க.வித்தியாலயம் ..
- ஆசிரியர் தரம் 3–I
- 21.02.1994 — 06.07.2010 – மூதூர் – லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயம் ..
- அதிபர் தரம் 2–II
- 07.07.2010 — 20.04.2015 – மூதூர் – கிளிவெட்டி மகாவித்தியாலயம்...
- அதிபர் தரம் 2–I
- 21.04.2015 — 31.12.2022 – மூதூர் – பட்டித்திடல் மகாவித்தியாலயம் – அதிபர் தரம் I

இவருடைய சேவைக் காலத்தில் குறைந்த வளங்களுக்கு மத்தியிலும் பட்டித்திடல் மகாவித்தியாலயம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மூதூர் வலயத்திற்கு பெருமை சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# கறுப்பு யூரியா என அழைக்கப்படும், நுண்ணுயிர் அசற்றோபக்டர்

என். ஆஷா பாலின்

சமகால இலங்கையின் விவசாய மேன்மைத்திட்டத்தில் அசேதன இராசயமற்ற விவசாய செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடனும், உயிரியல் தேக்கமடையும் நஞ்சு அற்ற உணவுகளை பொதுமக்கள் உண்ணவேண்டும் என்ற நோக்கத்துடன் பரிந்துரை செய்யப்படும் நவீன விவசாய முறைமையே உயிரியல் உரங்கள்.

பொதுவாக உயிர் உரங்கள் நைட்ரஜனை வேர்முடிச்சில் பொருத்துதல், பொஸ்பரஸ் சத்தைக் கரைத்தல் (Solubilizing) ஆகிய இயற்கை முறைகள் மூலம் தாவரத்துக்கு சத்துக்களைச் சேர்க்கும், மற்றும் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பதார்த்தங்களை உருவாக்கி அதன் மூலம் தாவர வளர்ச்சியைத் தூண்டும்.

இரசாயன உரங்களின் பயன்பாட்டை, முறையான இடுபொருட் களுடன் கொடுக்கப்படும் இவை போன்ற உயிர்உரங்கள் கணிசமாக குறைக்குமென்பது உறுதி.

உயிர் உரங்களில் ஒன்றான அசற்றோபக்டர் தன்னிச்சையாகவே வாழ்ந்து வளிமண்டல நைதரசனை பதிக்கிறது. இது உயிர் உரமாக "பயறுவகை அல்லாத பயிர்களுக்கு" முக்கியமாக கரும்பு, நெல், சோளம் காய்கறி மற்றும் பல பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

அசற்றோபக்டர் நுண்ணுயிர்கள் வேர் மண்டலத்தில் அதிக-ளவில் இருக்கும்.

இந்த நுண்ணுயிரி உற்பத்தி செய்யக் கூடிய ஒருவித பசையானது போசணை மூலகங்கள் நீரில் கழுவிச் செல்வதை தடுக்க உதவுகிறது.

சில தசாப்தங்கள் முன் பிரேசில் நாட்டில் கரும்புச் செய்கையில் ஒரு ஹெக்டேயரில் 1/3 அதிகமாக விளைச்சல் எடுத்துள்ளார்கள். சாதாரணமாக 60 தொன் விளைச்சல் கிடைத்து வந்த நிலங்களில் 80 தொன் கிடைத்துள்ளது. இதற்குக் காரணம் அசற்றோ பக்டர்’ (Acetobacter) என்ற நுண்ணுயிரியிலிருந்து கிடைக்கும் உயிர் உரம்தான் என்ற செய்தி, பிரேசில் நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்தபின்னரே இவற்றை பற்றிய விழிப்புணர்வு இந்தியாவில் ஏற்பட்டது.

பொதுவாக உயிர் உரங்களில் உள்ள நுண்ணுயிர்கள், பயிர்களின் வேர்களில்தான் வாழும். ஆனால், கறுப்பு யூரியா எனப்படும் அசற்றோபக்டர் கரும்புத் தாவரத்தின் உள்ளே சுக்குரோஸ் சத்திலும், அமிலத் தன்மையிலும் உயிர் வாழும் தன்மை கொண்டது. கரும்புக்குள்ளே இருந்துகொண்டு காற்றில் உள்ள நைதரசனை எடுத்துப் பயிருக்குக் கொடுக்கும்.

கரும்பு பயிரிட்ட வயலில் ஏக்கருக்கு எட்டு கிலோ கறுப்பு யூரியா கொடுத்து, இரசாயன யூரியாவை முற்றிலும் நிறுத்தினர். இருந்தும் விளைச்சல் 20% அளவுக்கு அதிகரித்தது. சோதனை வெற்றி பெற்றதால் தமிழகம் முழுக்க ஹகறுப்பு யூரியா’ பரவியது. இதன் பிறகும் வயல்வெளிச் சோதனைகள் தொடர்ந்தன. இதன் மூலம் இந்தியாவெங்கும் இதன் பயன்பாடு உணரப்பட்டது.

இதைக் கேள்விப்பட்டுப் பிரேசில் நாட்டிலிருந்து டாக்டர் டெபனர் என்ற பெண்மணி தமிழகம் வந்தார். இவர்தான், இந்த நுண்ணுயிரியை முதன்முதலில் கண்டறிந்தவர். கரும்பு செய்கையில் தமிழகம் எடுக்கும் விளைச்சல், இயற்கை உரப் பயன்பாடு ஆகியவற்றைப் பாராட்டிவிட்டுச் சென்றார். இந்தச் செய்தியை அறிந்த தென்கொரியா அரசு, ஹகறுப்பு யூரியா’ தொழில்நுட்பத்தைக் கற்பித்துத் தரும்படி இந்திய கரும்பு ஆரா-ய்ச்சி நிறுவனத்தை கேட்டுக்கொண்டது. அதன்படி தமிழக உயிரியல் ஆய்வு மையத்தின் விஞ்ஞானி ஆர்.முத்துக்குமாரசாமி என்பவர், ஓர் ஆண்டுக் காலம் கொரியாவில் தங்கியிருந்து தொழில்நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்துவிட்டு வந்தார்.


கறுப்பு யூரியா என அழைக்கப்படும் அசற்றோபக்டரை கரும்புக்கு மட்டுமல்லாமல், நெல், கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, மலர்கள், சிறுதானியங்கள் என அனைத்துப் பயிர்களுக்கும் சேதன உரத்துடன் பயன்படுத்தலாம். இதனால், இரசாயன உரச்செலவு மிச்சமாகும். கறுப்பு யூரியாவைப் பயன்படுத்தும்போது, அசோஸ்பைரில்லம் மற்றும் ரைசோபியம் உள்ளிட்ட உயிர் உரங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது.

இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் பரிந்துரைப்படி ஒரு ஏக்கர் நெற்பயிருக்கு 6 கிலோ கறுப்பு யூரியாவை மூன்று முறை, தலா 2 கிலோ என்ற விகிதத்தில் பிரித்து பயன்படுத்தலாம். நெற்பயிரில் கதிர் வரத்தொடங்கிவிட்டால், கறுப்பு யூரியாவைப் பயன்படுத்தக் கூடாது. காரணம், நைதரசன் அதிகரித்தால் விளைச்சல் பாதிக்கப்படும்.

இலங்கையில் உள்ள கரும்புத் தோட்ட பெருநிறுவனம் ஒன்றில் 2016 – 17 ஆம் ஆண்டுகளில் இவை பரீட்சார்த்தமாக பயன்படுத்தப் பட்டு இரசாயன உரப்பாவனை குறைக்கப்பட்டது.

இதேபோன்று 90 ஆண்டுகளுக்கு முன்னரே வர்த்தக சந்தைக்கு வந்துவிட்ட ரைசோபியம் (Rhizobium) பாக்டீரியாவை பயன்படுத்திய சூரைசோபிய உயிரியல் உரம் இதுவரைக்கும் இலங்கையில் விவசாயி-களிடையே பரவலாக அறியப்படாமல் இருப்பது, இயற்கை விவசாயத்தில் மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், துரதிஷ்டவசமாக நாம் எவ்வளவு தூரம் பின்தங்கியுள்ளோம் என்பதை நன்கு வெளிக்காட்டுகிறது. எனவே அரசாங்கம் இவற்றை விரைவில் உள்ளூர் சந்தைகளுக்கு அங்கீகரிப்பதானது இயற்கை விவசாயத்தின் இன்னொரு மைல்கல்லாக அமையும்.

# உங்கள் ஊர்க்குருவி...



ஊருக்குத்தெற்கே ஓர் அழகிய விவசாயக் கிராமம் அக்கராமத்தில் தான் எங்கள் இன்பமான வாழ்க்கை... கிராமத்துக்குக் கிராமம் பறந்து தெரிந்தாலும் மானிடனின் இன்ப துன்பங்களை அறிந்து கொள்வதிலும் ஓர் அலாதி இன்பம். றெசீதாவின் கணவர்

ஒரு விவசாய கூலித் தொழிலாளி அதிகாலை விடியலுடன் தொழிலுக்காக வீட்டை விட்டு வெளியேறிவிடுவார். வீட்டிலே மனைவியுடன் திருமண வயதை எட்டிய இரண்டு பெண் பிள்ளைகளும் பாட-சாலைக்குச் செல்கின்ற இரண்டு ஆண் பிள்ளைகளும் இதுதான் இவர்கள் குடும்பம். வீட்டின் கோடியில் சிறிய அளவிலான ஒரு வீட்டுத் தோட்டம். அடிப்படை வசதிகளே இல்லாத சின்னதாக ஒரு வீடு தென்னையோலையால் வேயப்பட்ட அடுப்பங்கரை கூரையின் ஓர-மாகத்தான் எங்களது கூடு இருக்கிறது.

காலை உணவுக்கு பாற்சோறு சமைப்பதற்காக சுளகில் அரைச்சுண்டு அரிசியைப் போட்டு முற்றத்தில் நின்று புடைத்துக்கொண்டிருந்தாள் றெசீதா. படக் படக் என சுளகு சத்தம் போட நானும் எனது துணைவியும் வெளியே வந்து தரையில் வீழ்ந்து கிடந்த குறுநெல் அரிசியையும் தவிட்டுத் துகல்களையும் பொறுக்கிக்கொண்டிருந்தோம்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் றெசீதாவின் மூத்த மகள் ஆயிஷாவுக்கு பக்கத்து வீதியில் இருக்கின்றன அப்துல் சமது போடிய-ாரின் மகன் ஆஸிமை மாப்பிள்ளை கேட்டுப் போனாங்க போல..

அரிசி புடைத்துக்கொண்டிருந்த ஆயிஷாவின் தாய் பதற்றமான குரலில் "நாளைக்குப் பின்னேரம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மக ஆயிஷாவ பொண்ணு பாக்க வரப்போறாங்க அவங்க வாற நேரத்துல ஆயிஷா புள்ளைக்கு போட்டுக்கொள்ள உருப்படியான ஒரு நல்ல சட்டகூட இல்ல...

என்ன செய்றதென்றே தெரியல்ல.... அல்லாஹ் போதுமானவன் ...." என்று பெருமூச்சுடன் புளம்பிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந் தாள் றெசீதா. இந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எங்கள் இருவருக்கும் மனம் கலங்கியது. சற்று நேரம் கழித்து எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது எனது துணைவியை யும் அழைத்துக்கொண்டு அப்துல் சமது போடியா ரின் வீட்டை நோக்கிப் பறக்கலானோம்.

அங்கே அவர்களின் வைக்கோல் மேட்டில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தோம். அப்துல் சமது போடியார் மாடுகள் குடிப்பதற்கு தண்ணீர் தொட்டிக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தார். அவர் கலகலப்பு மிக்க இரக்க சுபாவமும் கொண்ட நல்ல மனிதர். அவர் யாருடைய மனதும் புண்படும் படியாக நடக்கவே மாட்டார்.மாறாக மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்கும் மனிதநேயம் உடையவர். அவர் பெரிய பணக்காரனாக இல்லாவிட்டாலும் நூற்றுக்கும் அதிகமான ஆடு மாடுகளுக்கும் பதினைந்து ஏக்கர் வயல் நிலத்துக்கும் சொந்தக்காரர். அதனால்தான் மக்கள் அவரை போடியார் என்று மரியாதையாக அழைக்கின்றனர்.

காலை எட்டு மணி இருக்கும் போடியா ரின் மனைவி கையில் தேநீர் கோப்பையை ஏந்தியபடி மாட்டுக்காலையை நோக்கி வந்தாள். அப்துல் சமது போடியார் தேநீரை வாங்கிக் குடித்தவராக தன் மனைவியிடம் பேசத் தொடங்கினார். அவரும் பேச ஆரம்பிக்க நாங்களும் உசாராகி விட்டோம். "இங்கபாரு மைமுனா.... றெசீதாட மகள் ஆயிஷாவ நம்ம எல்லாருக்கும் நல்லாவே தெரியும் அந்தப்புள்ள அழகுலயும் அறிவுலயும் பண்பு பழக்க வழக்கங்களையும் நிறைவான புள்ள... அதனால பொண்ணு பாக்க போக வேண்டிய அவசியம் இல்ல என்று நான் நினைக்கிறேன். நாங்க மாப்புள தாரமென்டு ஒரு நல்ல செய்திய சொல்லி அனுப்பினா சரிதான புள்ள மைமுனா.... றெசீதாட குடும்ப நிலமயும் ரொம்ப கஸ்ட்டமா இருக்கிறதால நீங்களும் பொண்ணு பாக்க போக அவங்களுக்கு இன்னும் சிரமமா இருக்காதா மைமுனா..." என்றார். அதற்கு அவருடைய மனைவி "அதுக்காக பொண்ணு பாக்கப் போகாம இருக்கலாமா " என்றாள். மீண்டும் போடியார் மனைவியிடம் பேசத் தொடங்கினார் மைமுனா கொஞ்சம் கிட்ட வாவேன் இஞ்சபாரு புள்ள.... நீங்க பொண்ணு பாக்க போற நேரத்துல பொண்ணு போடக்கூடிய மாதிரி நல்ல உடுப்பு ஊட்டுத் தேவைக்கு இன்னும் கொஞ்சம் சாமானயும் வாங்கி ரகசியமா ஊரு உலகத்துக்குத் தெரியாம ராவோட ராவா றெசீதாட ஊட்டுக்கு கொடுத்தனுப்பிடு..... போ...போ... ஆகவேண்டிய வேலயப்பாரு...." என்று போடிய-ார் சொல்லி முடிக்க மனைவி மைமுனாவுக்கு சந்தோஷம் தாங்கவே முடியவில்லை கடவாய் விரிய சிரித்துக் கொண்டே வீட்டை நோக்கி விரைந்தாள். பெண்ணுக்கு தேவையான உடுப்புகளும் ஏனைய பொருட்களும் வாங்கி பெரிய பொதியொன்று தயார்படுத்தப்பட்டு போடியார் சொன்னபடியே றெசீதாவின் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டது. போடியாரும் அவரது மனைவியும் பேசிக்கொண்ட அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த நாங்கள் சந்தோசக்களிப்பால் அங்குமிங்குமாய் துள்ளிப் பாய்ந்து கீச் கீச் என கூச்சலிட போடியாருக்கு கோபம் ஏற்பட செல்லமாக சனியன் ச்சூ...ச்சூ என எங்களை விரட்டி துரத்திவிட்டார்.

நாங்களும் வேறுவேறு இடங்களுக் கெல்லாம் பறந்து திரிந்துவிட்டு எங்கள் இருப்பிடமான றெசீதாவின் வீட்டில் இருக்கும் எங்கள் கூட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தோம். அன்று இரவு 9 மணி இருக்கும் ஆயிஷாவின் கைத்தொலை பேசிக்கு அழைப்பு வருகிறது. ஆயிஷாவோ "என்னயிது புது நம்பரா இருக்குதே.. யாராயிரு க்கும் ...." என்றபடி தாயான றெசீதாவிடம் பேசும்படி கொடுத்தாள். றெசீதா ஹலோ... என்றதும் முதலில் சலாம் கூறி "நான் அப்துல் சமது போடியாரின் மகன் ஆஸிம் கட்டாரிலிருந்து பேசுகிறேன்... நான் உங்க மகள் ஆயிஷாவோட கொஞ்சம் பேசலாமா" என அனுமதி கேட்டான்.அடுத்த வினாடியே ஆம் என்ற றெசீதா மகள் ஆயிஷாவிடம் கைத்தொலைபேசியை கொடுத்தாள். ஆயிஷா செய்வதறியாது திகைத்துப் போனாள். எதிர் முனையில் ஆஸிம் ஹலோ ஹலோ.. என்ற குரலுக்கு பதிலளிக்க முடியாமல் தடுமாறினாள் ஆயிஷா சில நொடிகளின் பின்னர் தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு பேசத்தொடங்கினாள்.தன்னை திருமணம் செய்வதற்கு ஆயிஷாவின் விருப்பத்தை அறியவே தான் தொலைபேசி அழைப்புக்கு வந்ததாகக் கூறினான். ஆயிஷாவும் தன் மனப்பூர்வமான விருப்பத்தை ஆஸிமிடம் கூறினாள்.

அந்த தொலைபேசி உரையாடலை நாங்கள் இருவரும் எங்கள் கூட்டுக்குள் கேட்டுக் கொண்டுதான் இருந்தோம்.தொலைபேசி உரையாடல் முடிவடைந்த தும் ஆயிஷா தன் தாயிடம் ஆஸிம் பேசிக்கொண்ட அனைத்து விடயங்களையும் விபரித்தாள்.ஆனந்த வெள்ளத்தில் அலைமோதி மகிழும் மகளைப்பார்த்த உம்மாவுக்கு ஓட்டைப்பல் இடைவெளியால் வெத்திலையால் சிவந்த நாக்கு எட்டிப்பார்த்தது. எதிர்வரும் ரமழான் மாதம் ஆஸிம் நாட்டுக்கு வரப்போறதாகவும் நோன்புப்பெருநாள் கழித்து ஓரிரு தினங்களில் திருமணத்தை வைத்துக் கொள்வதாகவும் தனக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் வயல் காணியை மஹராக தருவதாகவும் தான் தனக்கென கட்டிய வீட்டில்தான் இருவரும் வாழப் போவதாகவும் ஆஸிம் கூறியதை செப்பி முடித்தாள் ஆயிஷா. இந்த ஆனந்த ராகத்தை ஆயிஷா பாடும்போது நாங்கள் இருவரும் கூட்டுக்குள் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம் சந்தோஷக் களிப்பால் கூச்சலிட்டுக் கொண்டு எங்கள் லீலைகளை நடாத்தலானோம்.

இப்படியான நல்ல அருமையான சில குடும்பங்களும் நம்மூரில் வாழ்த்து கொண்டுதான் இருக்கின்றன.

நான் சொன்ன சம்பவம் உண்மைதான் ஆனா கதையாகச் சொன்னா ருசியாக இருக்கமே என்பதற்காக கொஞ்சம் கற்பனையும் சேர்த்துகிட்டேன். மற்றுமோர் இதழில் இனிதான சம்பவத்துடன் சந்திக்கலாம்.



# தேடல் எனும் அறிவின் வாயல்!

புஹாரி ரஸீன் ரீஸா (அத்-தீனி)
கிழக்கு பல்கலைகழகம்



மனிதன் ஓர் வெற்றுப் பாத்திரம். அதனால்தான் தேடல் மூலம் அவனால் நிரம்பி வழிய முடிகிறது. இன்று எம்மத்தியில் தேடல் என்றாலே வாசிப்பு என்று மனதில் எண்ணிவிடுகிறோம். தேடல் என்பது வாசிப்பினால் கிடைக்கும் ஒன்று மட்டுமல்ல. மாறாக ஒருவர் தனக்கான தேவைகளை இறைவனால் கொடுக்கப்பட்டுள்ள புலன்களை என்னென்ன விதத்தில் பயன்படுத்தித் பெறுகின்றாரோ அத்தனையும் தேடலின் வடிவங்கள்தான்.

தாயின் கற்பறையில் வாழும் குழந்தை கூட உலகத்தைக் காண்பதற்கு முன்னரே தனது தேடலை ஆரம்பித்து விடுகின்றது என்று விஞ்ஞான உலகம் அண்மைக் காலங்களில் பல ஆய்வுகளை வெளியிட்டு வருகின்றது. தாய் செவிமடுக்கும் விடயங்களை தாயுடன் சேர்ந்து வயிற்றில் இருக்கும் குழந்தையும் கேட்பதாக வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

பொதுவாக மனித உடற்கட்டமைப்பை ஆராய்ந்து பார்க்கும்போது அவன் ஒரு தேடல் இயந்திரமாகவே காட்சியளிக்கின்றான். அவனுடைய வாய், கண், மெய், செவி, மூக்கு போன்ற எல்லாமே தேடல் என்ற பணியை வெவ்வேறு விதத்தில் செய்துகொண்டிருக்கின்றன. மனிதன் சுவாசிப்பது எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வாறுதான் அவன் உயிர்வாழத் தேவையான முக்கிய உடற் தொழிற்பாடுகளில் தேடலும் ஒன்றாக இடம்பிடித்து இருக்கின்றது.

ஆம், உணவோ, உடையோ, உறையுளோ அதற்குரிய தேடல் இன்றி எதிர்பார்த்துக்கொண்டிருப்பது மனித வாழ்வியல் ஓட்டத்திற்கு முரணான ஒன்றாகும். பொதுவாக உயிரினங்கள் அனைத்துமே தேடல் என்ற உள்ளுணர்வுடன்தான் வாழ்கின்றன என்பதையே அதனுடைய செயற்பாடுகள் கூறுகின்றன. குறிப்பாக தன்னுடைய தேவைகளைத் தேடிப்பெறுகின்ற சிந்தனையையும், அதற்கான அசைவுகளையும் மனிதன் என்று வரும்போது பன்மடங்கு ஏற்படுத்திக் கொள்வதிலேயே எல்லோர் கவனமும் இருக்க வேண்டும்.

தேடலும், திட்டமிடலும், நகர்வுகளும்தான் அவரவர் எதிர்காலமாக வந்துநிற்கின்றன.

தேடல் இல்லாமல் வாய் பேச முடியாத ஒருவர் எப்படி தன்னுடைய கட்டுரை ஊடாக சிறந்த கருத்துக்களைப் பேசியிருக்க முடியும்? ஒரு கண் பார்வை இல்லாதவர் எப்படி அழகிய கவிதைகள் சொல்லியிருப்பார்? இவ்வாறு உடலில் ஏதோவொரு குறைபாடுகள் இருந்தும் தனக்கிருக்கும் இன்னொரு புலனை உபயோகித்து சாதித்துக் காட்ட முடிகின்றது என்றால் அவர்கள் முடியுமான எல்லைகளுக்குள் தேடுவதை நிறுத்தவில்லை என்பதையே அவர்களின் அந்தத் திறமைகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

தேடல் உங்களை ஆழமாக்கும் கூரிய சொந்த ஆயுதம்தான். உங்களைச் சுற்றியுள்ள வளங்களை வைத்துக்கொண்டு அதிலே தேடல்களைத் துவங்கினால் பல்லாயிரம் அறிவுச் சுரங்கங்களுக்கு அல்லவா சொந்தக்காரர் ஆகப்போகிறீர்கள்! இன்று தேடலின் பெறுபேறுகள்தான் பல்லாயிரம் புதுப் புது உற்பத்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு மனித கண்டுபிடிப்புக்களும், ஆராய்ச்சி முடிவுகளும் தனித்தனியான பெயர்களுடன் அறிமுகம் செய்யப்படுகின்றன.

அறிவும் அதன் அனுபவுமே இன்றைய மிகப்பெரிய தேவைகளாக உள்ளன. தேடல் என்பது உங்கள் அறிவை மட்டுமல்ல பெருக்கிவிடு கிறது மாறாக உங்கள் அனுபவத்தையும்தான். சுருங்கக் கூறின் தேடல் என்பது வாழ்க்கையாகும். அந்த வாழ்க்கை தேடிக் கொள்பவர்களுக்கே கிடைக்கின்றது.

உரிய நேரத்தில் உரிய உள்ளீடுகளைக் கொண்டிருப்பதுதான் முழுமை என்று சொல்ல வேண்டும். உலகமே சந்தையாக கொழித்துக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் தேடலை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு முயற்சிக்கு சொந்தக்காரராக ஆகுவதுதான் புத்திசாலித்தனம். உங்கள் அறிவுக்கு ஏற்ற வேலையையும், வேலைப்பாதுகாப்பையும் நீங்களேதான் செய்து கொள்ளவேண்டும். உங்கள் அடையாளத்தைச் சொல்லும் ஒரு உற்பத்தி பற்றி உலகிற்குச் சொல்ல விரும்பினால் உங்கள் தேடல்களை அதிகரியுங்கள். உங்கள் கனவுகளுக்கு ஏற்ற விடைகள் தேடலில் கிடைக்கும். தேடிக்கிடைக்காத என்ற ஒன்று எதுவுமில்லை. சில நொடிகள் சிந்திக்கத் தவறிய தீர்மானம் வாழ்நாள் முழுவதிலும் தீக்காயமாகலாம். தினம் தினம் பல தேடல்களைச் செய்யுங்கள். நல்ல முடிவுகள் பல உங்களை எதிர்பார்த்த வண்ணமுள்ளன.

உங்களுக்குள் திறமை இருக்கிறது. ஒருமுறை தேடிப்பாருங்கள்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட தொற்று நோய் போன்ற பெரும்பெரும் அழிவுகள் உலகத்தையே உலுக்கிப்போட்டன. சாதாரண நாடுகள் ஒன்றுமே செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்தன. இன்று கூட எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள் வதற்கு மெல்ல மெல்ல முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. இந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரு சிலர் மட்டும்தான் இவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிய புதிய புதிய தேடல்களைச் செய்கிறார்கள். நீங்கள் உங்களி டமுள்ள கையடக்கத்தொலைபேசியை தேடலுக்காக பயன்படுத்தினாலே உலகம் உங்கள் கைகளில் என்றாகிவிடும்.

இன்று மக்கள் மின்வாழ்க்கைக்கு (e-life)பழகியிருக்கிறார்கள். நாடுகளின் எல்லைகளைக் கடந்த மின் நாடுகள் (e-state) உருவாகியி ருக்கின்றன. இதில் வலைவாசிகள் (netizens) என்ற புதிய குடி மக்கள் வாழ்கிறார்கள். மின்சமூகம் (e-Community) மின் பண்பாடு (e-culture) என்றெல்லாம் பேசப்படுகின்றது.

இதைச் சரியாகப் பயன்படுத்தி முயற்சித்த பலரும் இன்று பெரும் நிறுவனங்களாக மாறியிருக்கிறார்கள். உங்கள் திறமைகளை அடை யாளப்படுத்தும் வாய்ப்புக்களை தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள். சொற்ப நேரமாவது உங்களுக்காக, உங்கள் எதிர்காலத்திற்காக, உங்களை நம்பி வாழ்பவர்களுக்காக தேடலில் ஈடுபடுகின்ற போது நீங்கள் நினைக்காத அளவிற்கு வளர்ந்து நிற்பீர்கள். மாற்றம் என்பது நடந்து கொண்டுதான் இருக்கிறது. தேடல்கள் பல செய்து அதில் நீங்களும் பங்குதாரர் ஆகுங்கள். “தெரியாது“ என்ற வினாவிற்கு “தேடல்“ எனும் விடை வைத்திருந்தால் எப்போதும் அறிவாளிதான்.



அ.அ.மு.இன்பாஸ்
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்



# நவீன தொழிநுட்பமும் மனித வாழ்வு

இன்றைய மனிதர்களுடைய வாழ்வு வெகுவாக மாறியுள்ளது. மிக விரைவான தகவல் தொழிநுட்பச் சாதனங்கள் இதனை சாத்தியமாக்கியுள்ளன. உலகில் உள்ள மனிதர்களில் இந்த தொழிநுட்பங்களைப் பயன்படுத்தாமல் இருப்பவர்கள் விதிவிலக்கு என்று கூறுமளவிற்கு இதன் செல்வாக்கு அதிகரித்துள்ளது. உலகமெங்கும் தகவல் தொழி நுட்பம் மற்றும் அதனோடு இணைந்த சமூக வலைத்தளங்களுடைய பாவனை மனிதனை அடிமைப்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆரம்பகால மக்களிடம் இதுதொடர்பானது காணப்படவில்லை. ஏனெனில், அக்கால மனிதர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே காணப்பட்டனர். இதனால் இத்தொலைத் தொடர் சாதனங்களின் தேவை ஏற்படவில்லை. தமது தொடர்பாடல்களை இயற்கை ஊடகங்களான புறா, றபான், தீமூட்டல் மூலம் செயற்படுத்தினார்கள். இதனால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்தனர். ஆரம்ப காலங்களில் கடிதம் வாயிலாகக் காணப்பட்ட தொடர்பானது பின்பு தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக தொலைபேசி உருவாகின.

அதன் பின்னர், கனினிகள் உருவாகின. கனினிகள் வாயிலாக முதன்முதலில் 1997ல் Six Degree என்ற சமூக வலைத்தளம் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2005 **Youtube** எனும் செயலி உருவாகி பிரபல்யம் அடைந்தது. அதனைத் தொடர்ந்தே Face book, Yahoo போன்றனவும் 2006ல் இன்றைய உலகில் பிரபல்யமான Twitter, Instagram, Whatsapp போன்றன உருவாகி மனித சமூகத்தை வேறொரு பரிநாமத்திற்கு கொண்டு செல்கிறது.

அன்றாட வாழ்வில் நாம் உணவு, தண்ணீரை தவிர்க்க முடியாதது போலவே சமூக வலைத்தளங்களது பாவனையும் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. விரைவான தொடர் பாடல், தகவல்கள், அனர்த்த முன்னறிவிப்பு மற்றும் உலக செய்திகள் அனைத்தையும் மிக விரைவாக அறிந்து கொள்ள முடிகிறது. குறுகிக்கிடந்த மனிதனின் உணர்வுகளை இவை விசாலப்படுத்தியுள்ளது. காணொளிகள், புகைப்படங்கள் வாயி லாகவும் அழகான நினைவுகளை பகிர்ந்து கொள்ள இது உதவுகின்றன. கடல் கடந்து மனிதம் என்ற உறவில் பல நண்பர் களை உருவாக்கியுள்ளது. இணைய வழியில் வீட்டில் இருந்த படியே விரும்பியவர்களிடம் கல்வி கற்க முடிகிறது. தேவையான தகவல்களை தேடவும் முடிகிறது.

அசாதாரண சூழ்நிலைகளில் வீட்டிலிருந்தே வேலை பார்க்கவும் முடிகிறது. உலகமெங்கும் நடைபெறும் வன்முறை, பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரவும் முடிகிறது. அது போல பாதிக்கப்பட்டவர்களிற்கு விரைவாக உதவிகள் கிடைக்கவும் இவை பெரும் உதவியாக உள்ளன. உலகமெங்கும் விளம்பரங்கள், செய்திகள், வியாபாரங்கள் என்பன சமூக வலைத்தளங்களை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகின்றன.

சமூக வலைத்தளங்கள் பல நன்மைகளை தந்தாலும் பல தீமைகளையும் தருகிறது. ஒரே வீட்டில் வாழ்பவர்கள் கூட உறவுகளிடையே பேச முடியாத தூர சூழ்நிலையை இது உருவாக்கியுள்ளது. இதில் அதிக நேரம் பொழுதைக் கழிப்பதனால் உடலியல் ரீதியான பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மேலும் இவற்றின் பாவனையால் தனிப்பட்ட முயற்சி, கல்வி, வேலை என்பன பாதிப்படைகின்றன. சிறுவர்கள் தவறான வழியில் (ஆபாசமான திரைப்படங்கள், கேலிக்கையான விளையாட்டுக்கள்) இவற்றை பயன்படுத்துவதனால் அவர்கள் தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இதனால், சமூக குற்றச்சாட்டுக்கள் அதிகரிப்பதோடு எதிர்கால சிறந்த தலைமுறை பாதிக்கப்படுகின்றது. மேலும், சமூக வலைத்தளங்களின் பாவனையால் பத்திரிகை, புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் வெகுவாக குறைந்துவிட்டமை கவலைக்குரியதாகும். ‘அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு’ என்பது போல சமூக வலைத்தளங்களை அளவோடு பயன்படுத்துவது நன்மை தரும்.

எனவே, சமூக வலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும், இதனை சரியான முறையில் பயன்படுத்தினால் தனிநபர் மற்றும் சமூகங்களில் ஏற்படும் நலவுகள், மேலும், தவறான முறையில் பயன்படுத்தினால் தனிநபர் மற்றும் சமூகங்களில் ஏற்படும் பாதிப்புக்கள் என்பன தொடர்பாக தொழிநுட்பம் வளர்ச்சி அடைந்த இக்காலத்தில் முகநூல் போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாக சமூகத்திடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் சமூகத்தை சிறந்த முறையில் வழிநடத்த முடியும்.

## வழிகாட்டல் கருத்தரங்கு




இலங்கை புத்தாக்க சிந்தனை மையத்தின் ஏற்பாட்டில் கடந்த 23/11/2022 ஞாயிற்றுக் கிழமை பேர்ல் ஆனைச் சேனை பேர்ல் கிரேண்ட் மண்டபம் இஸ்லாமிய திருமணம் தொடர்பிலான இலவச பயிற்சிப்பட்டறையுடன் கூடிய வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்றது.

சமகால முஸ்லிம்களின் சிதைந்து போகும் திருமணக் கலாச்சாரப் பண்புகளைப் பாதுகாக்கும் செயற்திட்டங்கள் என்ற தொனிப்பொருளில் எ.எச்.எம் மின்ஹாஜ் மு.ஃப்தி (காஷிபி), மு.ஃப்தி முஹம்மது சௌமி கரீம் (அர் ரஷாதி), அஷ்ஷெய்க் ஆஷிக் அபுல் ஹசன் (ரஷாதி), அஷ்ஷெய்க் M.S.M முஜாஹித் (அல் மதனி) ஆகியோர் வளவாளர்களாக கலந்து சிறப்பித்ததோடு பிரதம அதிதியாக மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அரூஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

## Food Box திட்டம் முன்னெடுப்பு



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில், உணவுப் பொருட்களை தேவையானவர்கள் எடுத்துச் செல்லுங்கள் இயலுமானவர்கள் வைத்துச் செல்லுங்கள் எனும் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தில் 'Resilience' அமைப்பின் ஏற்பாட்டில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அந்தோனியர் மகா வித்தியால யத்தில் நிகழ்வு கடந்த 25/11/2022 நடைபெற்றது. பாடசாலையில் வைக்கப்பட்ட பெட்டியில் பிஸ்கட், பருப்பு, சீனீ ,கோதுமை மா, சமபோஷ மேலும் சில பொருட்கள் உள்ளிட்டவை வைக்கப்பட்டன. இதனை கே.எப்.பர்ஸானா அவர்கள் ஒருங்கிணைப்பு

## மாணவர்களுக்கான நீரிழிவு பரிசோதனை மற்றும்




சர்வதேச நீரிழுவு தினத்தை முன்னிட்டு மூதூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு 100 மாணவர்களுக்கான நீரிழிவு பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 10/11/2022 வியாழக்கிழமை காலை 8.00 மணி அளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மூதூர் மத்திய கல்லூரி பிரதி அதிபர் எம்.எஸ்.வதுாத் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளராக மூதூர் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர் வைத்தியர் என்.எம்.நிப்றாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

## ஆசிரியர் வாண்மை விருத்தி தகுதிச்சான்றிதழ் வழங்குவிழா




மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவிற்குட்டப்பட்ட 89 பாடசாலைகளை உள்ளடக்கிய சுமார் 86 ஆசிரியர்க ளுக்கான ஆசிரியர் சேவைத் தரம் 2-I இல் இருந்து தரம் 1 ற்கு தரமுயர்வு பெறுவதற்கான தகுதிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று மூதூர் ஆசிரியர் வான்மை விருத்தி மையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் காலை 10.30 மணி அளவில் PDCT Mutur நிறுவனத்தின் தலைவர் ஏ.டபுள்யூ. மாஹிர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்திராக வலயக்கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீம் அவர்களோடு பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.தாரிக் அவர்களும் விசேட விருந்தினர்களாக ஓய்வுநிலை SLAS அதிகாரி எம்.சி.எம். ஷெரீப் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எஸ்.எம். பௌஸி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி கற்றல் வழிகாட்டல் பயிற்சி நெறியை கடந்த 10 ஆண்டுகள் மேலாக ஆசிரியர்கள் வழிகாட்டல் மையம் மேற்கொண்டு வருவதோடு கல்விசார் பணியாளர்களின் வான்மை விருத்தி செயற்பாடுகளுக்கும் பல்வேறுபட்ட செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமைக்கும், அதன் பணிப்பாளராக பணியாற்றும் ஏ.டபள்யு. மாஹிர் அவர்களுக்கும் மூதூர் மண் சர்பாகாவும், கல்விசார் சமூகம் சார்பிலும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு




திருகோணமலை மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் "மொழிவிருத்தியினை மேம்படுத்தும்" நோக்கில் RECDO நிறுவனத்தினால் தோப்பூர், கிண்ணியா பிரதேசங்களில் 100 மணித்தியா லயங்கள் (சிங்கள, தமிழ்) பயிற்சியினை நிறைவுசெய்த 150 பயிற்சியாளர்கள் கடந்த 2022/11/07 அன்று சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.


தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் RECDO நிறுவனத்தின் திட்ட முகாமையாளரும், கௌரவ மூதூர் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எஸ்.எம்.தானீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் மற்றும் RECDO நிறுவனத்தின் தலைவர் ஜே.எம்.அஷார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## சுதந்திரதினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம்




இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 75வது தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு மூதூர் மதார் நம்பிக்கை நிதியத்தினால் வருடா வருடம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற இரத்ததான நிகழ்வானது இவ்வருடமும் 7வது தடவையாக மூதூர் தள வைத்திய சாலையில் இன்று மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது 120 க்கும் அதிகமான குருதி நன்கொடையாளர்கள் கலந்து கொண்டு உதிரம் வழங்கியிருந்தனர் கலந்து கொண்டவர்களில் 25 க்கும் அதிகமானவர்கள் பெண்கள் என்பது விஷேட அம்சமாகும். இவ் இரத்ததான நிகழ்வி ற்க்கு மதார் நம்பிக்கை நிதிய குடும்பத்தார்கள், மூதூர் தள வைத்திய சாலையின் வைத்தியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் பங்களிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.






# மூதூர் பிரதேச சபை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2023

பல்லின சமூகத்தை சார்ந்தவர்கள் ஒன்றித்து வாழும் பிரதேச சபைகளில் ஒன்றான மூதூர் பிரதேச சபை 13 வட்டாரங்களையும் அதற்கான 13 உறுப்பினர்களுடன், போனஸ் ஆசனங்களுடன் 24 மொத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய சபையாக அமைந்துள்ளது.

மூதூர் பிரதேச சபைப்பிரிவு 179.4 சதுர கிலோ மீற்றர் பரப்பினைக் கொண்டுள்ளதுடன் 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் 90 கிராமங் களையும், ஒரு பிரதேச சபையையும், இரண்டு பொலிஸ் நிலையங்களையும், 05 கமநல சேவை நிலையங்களையும் உள்ளடக்கிய பரந்த பிரதேச மாகும். மூதூர் பிரதேச சபை எல்லைக்குள் 22,838 குடும்பங்களும், 77,838 குடித்தொகை அடர்த்தி யையும், அவற்றில் 48,452 வாக்காளர்களையும் கொண்டுள்ளது. இதேவேளை 48,495 முஸ்லிம்கள், 22,248 தமிழர்கள், 663 கிறிஸ்தவர்கள், 270 சிங்கள வர்கள் மற்றும் 41 வேறு இனத்தவர்களையும் உள்ளடக்கியுள்ளதாக 2022 ஆம் ஆண்டுக்கான தரவுகள் குறித்து காட்டுகின்றது.

திருகோணமலை மாவட்ட வாக்காளர் விபரத்தின் படி (மாவட்ட இலக்கம் - 17) மாவட்டத் தில் உள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்ற 13 சபைகளை சார்ந்து மொத்த வாக்காளர்கள் 303,775 ஆகும்.

இதனடிப்படையில்... மூதூர் பிரதேச சபையானது திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய வாக்காளர் பரம்பலை கொண்டுள்ள பிரதேச சபையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மொத்த வாக்காளர்கள் 48,452 ஐ உள்ளட்டகிய வட்டார ரீதியிலான வாக்காளர் பரம்பல் பின்வருமாறு

**வட்டாரம் - வாக்குகளின் எண்ணிக்கை**

1. சம்பூர் - 4,239
2. கட்டைபறிச்சான் - 3,748
3. நெய்தல்நகர் - 3,783
4. அக்கரைச்சேனை - 4,084
5. மூதூர் - 4,438
6. ஜாயா நகர் – 4,844
7. பெரியபாலம் - 4,462
8. இருதயபுரம் - 3,308
9. கிளிவெட்டி - 3,560
10. பாலத்தோப்பூர் - 3,309
11. தோப்பூர் - 2,483
12. அல்லைநகர் - 2,571
13. பள்ளிக்குடியிருப்பு – 3,623

இதனடிப்படையில் கட்சிகள்

1 - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்,
2- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,
3 - ஈரோஸ் ஜனநாயக முன்னணி ,
4 - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி,
5 - ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி,
6 - ஐக்கிய தேசியக் கட்சி,
7- ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி,
8- தேசிய காங்கிரஸ்,
9 - தேசிய மக்கள் சக்தி,
10 - தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்,
11 - தமிழர் விடுதலைக் கூட்டணி,
12-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,
13-ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன,
14- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
15 - ஐக்கிய மக்கள் சக்தி,
16, 17, 18 - சுயாதீன குழு 1, 2, 3 போன்ற கட்சிகள்

13 வட்டாரங்களை கொண்ட மூதூர் பிரதேச சபையில் இம்முறை 15 பதிவு செய்யப்பட்ட கட்சிகளும், 3 சுயேற்சை குழுக்களும் களமிறங்கியுள்ளன. அத்துடன் இவர்களை சார்ந்து 234 வேட்பாளர்களும், 198 போனஸ் வேர்பாளர்களும் களமிறக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் வருட வருமானம் ஈட்டும் சபைகளில் முன்னணியில் உள்ள சபையாக மூதூர் பிரதேச சபையும் ஒன்றாகும். இருந்த போதும் தங்களால் நிறைவேற்றப்படும் பணிகளில் பெரும்பாலான துறைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இலாபமீட்டும் சபையாக மூதூர் பிரதேச சபையை அடையாளம் காட்டமுடியும்.

**நாட்டில் நிலவும் ஸ்தீரணமற்ற பொருளாதாரம், அரசியல் தளம்பல் என்பன சமகாலத்தில் பிரதேச சபை தேர்தலை கேள்விக்குறியாக்க மாற்றினாலும் எல்லை நிர்ணய அறிக்கையின் படி மூதூர் பிரதேச சபை பாரியதொரு சவாலை எதிர்காலத்தில் நோக்கலாம் என்பது மட்டும் நிச்சயமானது**

கடை வாடகை, முத்திரை வரி, நீதி மன்றத் தண்டப்பணம் , இறைச்சிக் கடை போன்ற நான்கு பிரதான நிதியீட்டல் மூலங்களால் மூதூர் பிரதேச சபைக்கு வருட மொன்றுக்கு 40 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்படுகின்றது. இந்நிதியானது பல் வேறுபட்ட உட்கட்டுமான மற்றும் நீண்டகால வருமானமீட்டும் துறைக ளுக்கு முதலீடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

நகரசபையாக தரமுயர்த் தப்பட்டு மேலதிக பிரதேச சபைகள் உருவாக்கி நிர்வாக ரீதியாக புதிய அலகுகள் தோற்றுவிப்பதன் மூலமாக மாற்றங்களை உண்டாக்கவேண்டிய அத்தியவசியப்பாட்டை கடந்த காலங்களில் இடம்பெற்ற அனர்த் தங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் அபிவிருத்திகள் உணர்ந்தியுள்ளன. இருந்தபோதும் அரசியல் ரீதியிலான ஆதிக்கம் மற்றும் இன, பிரதேச பகுப் பாடு என்பவற்றின் பின்னணியினால் இதுவரை தரமுயர்த்தப்படாமல் இருப்பது துரதிஷ்டம்தான். நகரசபை யாக தரமுயர்த்தலுக்கான முயற்சி களை புதிதாக அமையவிருக் கும் சபை உரிய தரப்பினருக்கு முன்மொழி வுகளையும், முன்னெடுப் புகளையும் கொண்டுசேர்க்குமென எதிர்பார்கிறேன்.

























# முத்திதழ் - இரு ஆண்டு

முத்திதழ் சஞ்சிகை இரண்டு வருடங்களை தாண்டி இன்று 10 இதழாக உங்கள் கைகளை வந்தடைந்துள்ளது. இரண்டு வருட பயணத்தில் எம்முடன் விளம்பர அனுசரணைகளை அளித்த மெது ஊரின் விற்பனை நிலையங்கள், போட்டி அனுசரணைகளை அளித்த தனவந்தர்கள் மற்றும் மெக்கு மேலான ஆக்கங்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய நல்லுள்ளங்கள் அனைவரும் இவ்விடத்தில் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்





## முத்திதழ் சஞ்சிகைக்கான விளம்பரம்

உங்கள் வியாபாரஸ்தளங்களை மக்கள் மயமாக்கவேண்டுமா?

இதோ! முத்திதழ் சஞ்சிகை உங்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்கத்தயாராகின்றது

| BASIC | STANDARD | PREMIUM |
|---|---|---|
| Creative Design | Creative Design | Creative Design |
| Quality print | high quality print | high quality print |
| Black & White | Color page | Color page |
| 1/4 of a page | 1/8 of a page | 1/4 of a page |
| Monthly package | Monthly package | Monthly package |
| Rs 1000 | Rs 1500 | Rs 2500 |

திருகோணமலை மாவட்டம் முழுவதும் உங்கள் வியாபார நடவடிக்கையை விஸ்தீரணம் அடையும் வாய்ப்பு

Hotline (94) 771020030

Contact 0771020030
Facebook Muththithal Mutur
Gmail muturjmi@gmail.com
Whatsapp 0717891887


TRUST travels & tours pvt ltd
TRUST
TRAVELS & TOURS
PVT LTD.
Air Line Ticketing
Holiday Tour Packages
Visa Consultation
Tourist Visa Arrangment
Airport Transport
All Countries Online Visa
வெளிநாடு செல்வதற்கான அனைத்து
விதமான சேவைகளையும் எங்களிடம்
பெற்றுக்கொள்ள முடியும்
SriLankan
Kuwait Airways
SalamAir
Emirates
QATAR
Virgin australia
Cathay Pacific
SAUDIA
malaysia
OMAN AIR
MANAGING DIRECTOR
S.A.RIFKAN
WhatsApp
+94 75 69 85 431, +94 77 82 55 431
trusttravels.air@gmail.com
Main Street, Front of MOH Office, Mutur.


Nisha Beauty Care
MAIN STREET, MUTHUR. TEL : 0758090615
BRIDAL MAKEUP
PARTY MAKEUP
MEHENDY DESIGN
THREADING
ALL TYPE OF FACIAL
PIMPLE TREATMENT
KERATIN TEATMENT
HAIR CUT (LADIES)
HAIR COLORING
HAIR STRAIGHTENING
LADIES ONLY
0758090615
MAIN STREET, MUTHUR.


Pearl Grand
PEARL GRAND
Moments made Perfect
More Than You Expected
PEARL GRAND
Beyond your Expectations
✓ Newly Refurbished and Expanded Pearl Grand
✓ With state of the Art Technology
✓ Consisting of two story function halls
✓ Separate halls to accommodate Gents and ladies functions
✓ With the capacity to accommodate more than 1000 guests
✓ Celebrate with grandeur at pearl grand Make unforgettable memories with our outstanding service
✓ A perfect venue for a destination wedding
✓ All Covid 19 precautions are strictly in place with MOH approval
✓ Contact now to reserve your memorable events We are always on hand to assist with your perfect occasions
077 15 444 88 | 075 23 42 343
Pearl Grand
Knox Road, Mutur


Quality Mart
Modern
Mens Wear &
Kids Wear
Wedding Dress
Collections
EMERALD
LAROUSSE
COSMATICS
MOOSE
VANTAGE
KIDSWARE
BABAYHUG
Quality Mart
வாழ்க்கைக்கோர் புது வடிவம்
N.RIHAN
077 15 444 88 | 075 60 26 304
Quality Mart
Batticaloa Road,Periyapalam,Mutur 05